ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

# நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர்- 180) Oct (1) / 2014



நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

## உட்பொதிவு

1. ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம் (ஸ்வாமி பராசரபட்டர் பாஷ்யம்)…………………......3

2. ஸ்ரீபாஷ்யம் ………………………………………………………………….....17

3. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் …………………………………………….……...19

4. ஸ்ரீவசனபூஷணம்……………………………………………………………....23

5. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)..……....……………………………………...33

6. இராமாநுச நூற்றந்தாதி.........……………………………………………….....40

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபராசரபட்டர் அருளிச் செய்த

# ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம்

(பகுதி – 157 - நிறைவுப்பகுதி)

## 991. க்ஷிதீச:

அனைத்திற்கும் ஈச்வரனாக உள்ளபோதிலும், இந்தப் பூமியின் துன்பங்களை நீக்குவதற்காக இங்கு அவதரிப்பதால் இவ்விதம் கூறப்படுகிறான். யோநந்தரூப: அகிலவிச்வரூபோ கர்ப்பேபி லோகாந் வபுஷா பிபர்த்தி – அவன் எண்ணற்ற ரூபங்கள் கொண்டவன், இந்த விச்வத்தையும் தனது ரூபமாகக் கொண்டவன், அனைத்தையும் தனது ரூபத்தில் கொண்டுள்ளான் – என்றது காண்க.

## 992. பாபநாசந:

தயிர்வெண்ணெய் முதலானவற்றைக் களவு செய்தும், ராஸலீலை போன்றவைச் செய்தும் இவ்விதம் உள்ள பலவிதமான திவ்யலீலைகளை வெளிப்படுத்தும் சரிதங்கள் என்னும் அமிர்தம் மூலம், அவற்றைக் கேட்பவர்களுடைய அனைத்து பாவங்களையும் விலக்குபவன். அல்லது அவதாரத்திலும் தனது அடியார்களுக்கு உண்டாகவல்ல வெளிப்பகைவர்கள் மற்றும் உட்பகைவர்களான காமம் முதலானவற்றை அழிப்பவன் என்றும் கூறலாம்.

## 993. சங்கப்ருத்

அவதார காலத்திலும் தனது உயர்ந்த ஐச்வர்யத்திற்கான அடையாளமாகத் திகழக்கூடிய ஆயுதங்களை உடையவன். பாஞ்சஜன்யம் என்னும் தனது சங்கை தன்னுடைய உதடுகளில் வெளிப்படும் அமிர்தம் மூலம் எப்போதும் சுவைப்பவன்.

## 994. நந்தகீ

ஸர்வேச்வரனுக்குக் கூட "இது என்னை மகிழ்விக்கவேண்டும்" என்று பிரார்த்திக்கும்விதம் உள்ளதான நந்தகம் என்னும் கத்தியை எப்போதும் கொண்டவன்.

## 995. சக்ரீ

எப்போதும் காண்பவர்களுக்கு இனியவர்களாக, தன்னை அண்டி நிற்கும் தேவர்களுக்கு விரோதிகளான அஸுரர்களை அழிப்பதால் அவர்களுடைய இரத்தம் காரணமாக வர்ணத்துடன் கூடியதும், அதிக ஜ்வாலைகளுடன் உள்ளதும் ஆகிய சுதர்சன சக்கரத்தைக் கொண்டவன்.

## 996. சார்ங்கதந்வா

நாணைப் பூட்டியதன் மூலம் உண்டாகும் பயங்கரமான ஓசையாலும், சரமாரி பொழிவதாலும் பகைவர்கள் என்னும் பெயரையே ஒழிப்பதும், தமக்கு ஏற்ற விதத்தில் உள்ளதும் ஆகிய சார்ங்கம் என்னும் வில்லை உடையவன்.

## 997. கதாதர:

ப்ரளய காலத்தில் உண்டாகும் அக்னி போன்று நான்குபக்கங்களிலும் தீப்பொறிகளை வாரி இறைத்து, பகைவர்களை அழித்து, அதன் காரணமாக

தனக்கும் உலகத்திற்கும் எப்போதும் மகிழ்வை உண்டாக்குவதால் “கௌமோதகி” என்னும் பெயர் பெற்ற சிறந்த கதையைத் தரித்தவன்.

## 998. ரதாங்கபாணி:

மேலே கூறியபடி சக்கரத்தை எப்போதும் தனது திருக்கரத்தில் தரித்தவன். “சக்ரீ” என்பதன் மூலம் “சக்கரத்தைக் கொண்டவன்” என்று கூறப்பட்டாலும், “ரதாங்கபாணி:” என்று மீண்டும் கூறியது ஏன்? காரணம் – தீயவர்களை போக்கவும் நல்லவர்களைக் காக்கவும் எப்போதும் மற்ற ஆயுதங்கள் உள்ளபோதிலும், சக்கராயுதம் மட்டும் எப்போதும் ப்ரயோகம் செய்வதற்குத் தயாராக உள்ளது என்பதை உணர்த்துவதால் கூறியது கூறல் என்னும் புநருக்தி தோஷம் இல்லை.

## 999. அக்ஷோப்ய:

தன்னைச் சரணம் அடைந்தவர்களுக்கு அபயம் அளித்தல் என்னும் உறுதியான விரதத்தில் இருந்து எந்த ஒரு காரணத்தாலும் அசைக்க இயலாதவன். தனது மஹிமையால் யாராலும் வெல்ல இயலாதவன்.

## 1000. ஸர்வப்ரஹரணாயுத:

தன்னை மட்டுமே நம்பி உள்ளவர்களுக்கு விருப்பம் அல்லாதவற்றை வேரோடு களையத் தக்கவையும், அளவற்ற சக்தி உள்ளவையும், எண்ணற்றவையும், அவனுக்குச் சிறந்த ஆபரணங்கள் என்று கொண்டாடும்படி உள்ளவையும் ஆகிய பல திவ்யமான ஆயுதங்களைக் கொண்டவன். அடியார்களைக் காப்பாற்றுதல் என்னும் உறுதியான ஸத்ரயாகத்தில் தீக்ஷை பெற்றுக்கொண்டவைகளும், ஸர்வேச்வரத்தன்மை என்னும் தன்னுடைய பாரத்தைத் தாங்குபவைகளும் ஆகிய பல ஆயுதங்களையும் கொண்டவன்.

இவ்விதம் அனைத்துவிதமான தோஷங்களுக்கும் எதிர்த்தட்டாகவும், காரணம் – எண்ணிக்கை – எல்லை ஆகியவற்றைக் கடந்தும், அனைத்திலும் உயர்ந்த மங்களகரமாய் உள்ள ஸ்வரூப ரூப குண விபவ லீலைகள் ஆகியவற்றை உடையவனாய், எப்போதும் தடையில்லாத ஸர்வேச்வரத்தன்மை உள்ளவனாய், அனைவரும் கலந்து பழகக்கூடிய எளியவனாய், ஆபத்து காலத்தில் உதவும் தன்மை கொண்டவனாய், வேண்டியவைகளை அளிக்கும் கற்பகமரம் போன்றவனாய், தனது திருவடிகளின் கீழ் நிற்பவர்களுக்கு உயிர்த்தோழனாய், மஹாலக்ஷ்மியின் நாயகனாய், பகவான் என்னும் பதத்திற்கே உரிய ஆறு குணங்கள் நிரம்பப்பெற்றவனாய் உள்ள புருஷோத்தமனை அண்டி நிற்பவர்களுக்கு அனைத்துவிதமான செல்வங்களும் நீங்காமல் வளர்ந்தபடி இருக்கும் – என்று இந்த ஆயிரம் திருநாமங்கள் மூலம் கூறப்பட்டது.

இப்படியாக ஹாரீத குலத்திற்குத் திலகம் போன்ற ஸ்ரீவத்ஸாங்கர் என்னும் கூரத்தாழ்வானின் திருக்குமாரரும், ஸ்ரீரங்கநாதனின் தெய்வீக ஆணையால் ஸ்ரீபாராசரபட்டர் என்னும் பெயர் பெற்றவரும் ஆகிய ஸ்ரீரங்கநாதன் அருளிச்செய்த பகவத் குண தர்ப்பணம் என்ற ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில், பத்தாவது நூறு திருநாமங்களின் வ்யாக்யானம் ஸம்பூர்ணம்.

## பலச்ருதி

**அவதாரிகை** – அடுத்து இந்த ஸஹஸ்ரநாமத்தின் பெருமையை அறிவிக்கவேண்டும் என்று எண்ணியவராக சாந்தனுவின் புத்திரரான பீஷ்மர், குந்தியின் புத்திரரான தர்மருக்கு உரைக்கிறார்.

யதிதம் கீர்த்தநஸ்ய கேசவஸ்ய மஹாத்மந:
நாம்நாம் ஸஹஸ்ரம் திவ்யாநாம் அசேஷேண ப்ரகீர்த்திதம்

**பொருள்** – நாமஸங்கீர்த்தனம் செய்யத்தக்கவனும், மிகுந்த மஹிமை பொருந்தியவனும் ஆகிய கேசவனுடைய திருநாமங்கள் ஆயிரமும் ஒன்றுவிடாமல் கூறப்பட்டன.

**பாஷ்யம் –** “கீர்த்தநஸ்ய” என்பதன் மூலம் “இன்று முதல் நீ பகவானைக் கீர்த்தனம் செய்யவேண்டும்” என்பதும், “கேசவஸ்ய மஹாத்மந:” என்பதால் கீர்த்தனம் செய்யவேண்டியதன் காரணம் என்பதும், “திவ்யாநாம்” என்பதன் மூலம் “முக்தி அடைந்தவர்களால் பரமபத்திலும் கீர்த்தனம் செய்யப்படவேண்டும்” என்பதும், “அசேஷேண” என்பதால் “இனி உனக்கு அறியவேண்டியது வேறு ஒன்றும் இல்லை” என்பதும் கூறப்பட்டன.

**அவதாரிகை –** அடுத்து அதிகாரி யார் என்பதும், பலனும் கூறப்படுகிறது.

யதிதம் ச்ருணுயாந்நித்யம் யச்சாபி பரிகீர்த்தயேத்
நாசுபம் ப்ராப்நுயாத் கிஞ்சித் ஸோமுத்ரேஹ சமாநவ:

**பொருள் –** இந்த ஸஹஸ்ரநாமத்தை எப்போதும் கேட்டபடி உள்ளவனும், கீர்த்தனம் செய்தபடி உள்ளவனும் பரலோகம் மற்றும் இந்தப் பூமியில் சிறிதும் கெடுதலை அடையமாட்டான்.

**பாஷ்யம் –** “இதம் ச்ருண்யாத்” முதலானவை மூலம் “அவரவர் தகுதிக்கு ஏற்றபடி கீர்த்தனம் செய்தால் இங்கும் அங்கும் உள்ள அசுபங்கள் அனைத்தும் நீங்கிவிடும் என்று கருத்து.

வேதாந்தகோ ப்ராஹ்மண: ஸ்யாத் க்ஷத்ரியோ விஜயீ பவேத்
வைச்யோ தநஸம்ம்ருத்த: ஸ்யாச்சூத்ர ஸுகம் அவாப்நுயாத்

**பொருள் –** இந்த ஸஹஸ்ரநாமத்தை அந்தணன் ஜபித்தால் வேதாந்த ஞானம் கிட்டும், க்ஷத்ரியன் ஜபித்தால் வெற்றி கிட்டும், வைசியன் ஜபித்தால் செல்வம் கிட்டும், சூத்திரன் ஜபித்தால் இன்பம் கிட்டும்.

**பாஷ்யம் –** அடுத்து அந்தணர்கள் முதலான நான்கு வர்ணத்தாருக்கும் பகவத்பக்தி என்பது திடமாக உண்டாகாதபோது, அவர்கள் எந்தவிதமான பலனையும்

எதிர்பாராமல், இந்த ஸஹஸ்ரநாமத்தைக் கேட்டாலும், ஜபித்தாலும் அவர்களுக்கு ஏற்படும் பலன்கள் கூறப்படுகிறது.

தர்மார்த்தீ ப்ராப்நுயாத் தர்மம் அர்த்தார்த்தீ ச அர்த்தம் ஆப்நுயாத்
காமாந் அவாப்நுயாத் காமீ ப்ரஜார்த்தீ ச ஆப்நுயாத் ப்ரஜா:

**பொருள்** – தர்மத்தைக் கோரியவன் தர்மத்தையும், பொருளை விரும்பும் ஒருவன் பொருளையும், போகத்தைக் கோரியவன் போகத்தையும், குழந்தைகளைக் கோரியவன் குழந்தைகளையும் பெறுவான்.

**பாஷ்யம்** – நான்கு வர்ணத்தினரும் ஏதேனும் பலனை எண்ணி ஜபித்தால், அவர்கள் விரும்பும் பலனை அடைவார்கள் என்று கூறப்படுகிறது.

**அவதாரிகை** – அடுத்து சில விதிமுறைகளுடன் ஸஹஸ்ரநாமத்தை ஜபித்தல் என்னும் ஸங்கீர்த்தனம் செய்யும் ஒருவனுக்கு அனைத்துவிதமான ஐச்வர்யங்களும் உண்டாகும் என்பதை அடுத்துள்ள நான்கு ச்லோகங்கள் கூறுகின்றன:

பக்திமான் ய: ஸ்தோத்தாய சுசி: தத்கத மநஸ:
ஸஹஸ்ரம் வாஸுதேவஸ்ய நாம்நாம் ஏதத் ப்ரகீர்த்தயேத்

யச: ப்ராப்நோதி விபுலம் ஜ்ஞாதி ப்ராதாந்யமேவ ச
அசலாம் ச்ரியமாப்நோதி ச்ரேய: ப்ராப்நோத்யநுத்தமம்

ந பயம் க்வசிதாப்நோதி வீர்யம் தேஜச்ச விந்ததி
பவத்யரோகோ த்யுதிமாந் பல ரூப குணாந்வித:

ரோகார்த்தோ முச்யதே ரோகாத் பத்தோ முச்யேத பந்தநாத்
பயாந் முச்யதே பீதஸ்து முச்யேதாபந்ந ஆபத:

**பொருள்** – யார் ஒருவன் அன்றாடம் உறங்கி எழுந்த பின்னர் நீராடுதல் முதலான கர்மங்களைச் செய்து, பரிசுத்தனாகி, பக்தியுடன் வாஸுதேவனிடம் மனதை நிலைநிறுத்தி, அவனுடைய இந்த ஆயிரம் திருநாமங்களையும் நன்றாகக் கீர்த்தனம் செய்வானோ அவன் மிகுந்த கீர்த்தியையும், மனிதர்களில் முதன்மையாக உள்ள நிலையையும், அழியாத செல்வத்தையும், அனைத்தைக் காட்டிலும் உயர்ந்த மோக்ஷத்தையும் பெறுகிறான். அவனுக்கு எங்கும், எப்போதும், எதற்கும், பயம் இல்லை. அவன் சக்தி மற்றும் தேஜஸ்ஸை அடைகிறான். நோயற்றவனாகவும், காந்தி உள்ளவனாகவும், பலம் – ரூபம் – குணம் கொண்டவனாகவும் ஆகிறான். நோயாளி ஒருவன் அந்த நோய்கள் நீங்கப்பெறுகிறான். பந்தத்தில் அகப்பட்டவன் அந்தப் பந்தத்தில் இருந்து விடுதலை அடைகிறான். பயத்தில் உள்ளவன் பயம் இல்லாதவன் ஆகிறான். ஆபத்தை அடைந்தவன் ஆபத்திலிருந்து விடுபடுகிறான்.

**அவதாரிகை** – அடுத்து, பகவானை மட்டுமே விரும்பி நிற்கும் மற்ற எதிலும் பக்தி இல்லாமல் உள்ளவனுக்கு, அவன் பிரார்த்தனை செய்யாமலேயே தீயவைகள் அவனிடமிருந்து அகன்றுவிடும் எனப்படுகிறது.

துர்க்காணி அதிதரத்யாசு புருஷ: புருஷோத்தமம்
ஸ்துவந் நாம ஸஹஸ்ரேண நித்யம் பக்தி ஸமந்வித:

**பொருள்** – பக்தியுடன் கூடியவனாக இந்த ஆயிரம் திருநாமங்களால் புருஷோத்தமனைத் துதிக்கும் ஒருவன், அனைத்து கஷ்டங்களையும் கடக்கிறான்.

**அவதாரிகை** – அப்படிப்பட்டவர்களுக்கு உரிய பலன்கள் கூறப்படுகிறது.

வாஸுதேவாச்ரயோ மர்த்யோ வாஸுதேவ பராயண:
ஸர்வபாப விசுத்தாத்மா யாதி ப்ரஹ்ம ஸநாதநம்

**பொருள்** – வாஸுதேவனையே அண்டியவனாக, வாஸுதேவனை மட்டுமே பரமகதியாய் நம்பியுள்ளவனாக இருக்கும் ஒருவன், அனைத்து பாவங்களிலிருந்தும் விடுபட்டவனாக, எப்போதும் உள்ள ப்ரஹ்மத்தை அடைகிறான்.

**அவதாரிகை** – நியமங்களுடன் கூடிய பக்தனுக்கு இடையே வந்து சேரும் பலன்கள் கூறப்படுகின்றன.

ந வாஸுதேவ பக்தாநாம் அசுபம் வித்யதே க்வசித்
ஜந்ம ம்ருத்யு ஜரா வ்யாதி பயம் நைவோபஜாயதே

இதம் ஸ்தவம் அதீயாந: ச்ரத்தா பக்தி ஸமந்வித:
யுஜ்யேத ஆத்ம ஸுக க்ஷாந்தி ஸ்ரீ த்ருதி கீர்த்திபி:

**பொருள்** – வாஸுதேவனிடம் பக்தி கொண்டவர்களுக்கு எப்போதும் தீமை வருவதில்லை. அவர்களுக்குப் பிறப்பு, இறப்பு, மூப்பு, பிணிகள் குறித்த பயமும் உண்டாவதில்லை. மிகுந்த ச்ரத்தை, பக்தி ஆகியவற்றுடன் கூடி இந்த ஸஹஸ்ரநாமத்தை அத்யயனம் செய்யும் ஒருவன் சுகம், பொறுமை, செல்வம், தைர்யம், ஞாபகத்திறன், புகழ் ஆகியவற்றை அடைவான்.

**அவதாரிகை** – பகவத்பக்தியானது மிகுந்த புண்ணியங்களுடைய காரணத்தால் உண்டாகும் பலனாகும். அது உண்டானால் க்ரோதம் முதலான தோஷங்கள் தாமாகவே விலகும் என்று கூறப்படுகிறது.

ந க்ரோதோ ந ச மாத்ஸர்யம் ந லோபோ நாசுபா மதி:
பவந்தி க்ருத புண்யாநாம் பக்தாநாம் புருஷோத்தமே

**பொருள்** – புண்ணியம் செய்வதன் காரணமாக புருஷோத்தமனை அடைந்தவர்களுக்குக் கோபம் உண்டாவதில்லை; பொறாமை உண்டாவதில்லை; ஆசை ஏற்படுவதில்லை; தீய எண்ணங்கள் உண்டாவதில்லை.

**அவதாரிகை** – மேலே கூறப்பட்ட பலன்கள் அனைத்தும் புனைந்துரை என்னும் அர்த்தவாதமோ என்று பக்தி அற்றவர்கள் சந்தேகம் அடையக்கூடும் என்று எண்ணி, “எம்பெருமானுடைய பெருமை காரணமாக கைகூடாதது ஏதும் இல்லை; ஆகவே இவற்றை அதிவாதம் (exaggeration) என்றோ, வேறுவிதமாகவோ

எண்ணக்கூடாது" என்று உணர்த்துவதற்காக அவனுடைய பெருமையை விவரிக்கிறார்.

த்யௌ: ஸ சந்த்ர அர்க நக்ஷத்ரா கம் திசோ பூர் மஹோததி:
வாஸுதேவஸ்ய வீர்யேண வித்ருதாநி மஹாத்மந:

**பொருள்** – சந்த்ரன், சூரியன், நக்ஷத்திரங்கள் ஆகியவற்றுடன் கூடிய மேல் லோகமும், இடைவெளியாகிய ஆகாசமும், திசைகளும், பூமியும், கடலும் மஹாத்மாவான வாஸுதேவனுடைய சக்தியால் தாங்கப்பட்டுள்ளன.

**அவதாரிகை** – அனைத்தும் அவனுடைய சக்தியால் தரிக்கப்பட்டுள்ளன என்று கூறிய பின்னர், அனைத்தும் அவனுக்கு வசப்பட்டுள்ளன என்பது கூறப்படுகிறது.

ஸ ஸுர அஸுர கந்தர்வம் ஸ யக்ஷோரக ராக்ஷஸம்
ஜகத் வசே வர்த்ததேதம் க்ருஷ்ணஸ்ய ஸ சராசரம்

**பொருள்** – தேவர்கள், அஸுரர்கள், கந்தர்வர்கள், யக்ஷர்கள், நாகர்கள், ராக்ஷஸர்கள், சராசரங்கள் ஆகிய அனைத்தும் க்ருஷ்ணனுடைய கட்டுப்பாட்டில் உள்ளன.

**அவதாரிகை** – இவ்விதம் அவை அனைத்தும் வசப்பட்டுள்ளவை என்பது ஆத்மா – சரீரம் என்ற ஸம்பந்தம் போன்றதாகும் எனப்படுகிறது.

இந்த்ரியாணி மநோ புத்தி: ஸத்வம் தேஜோ பலம் த்ருதி:
வாஸுதேவாத்மகாநி ஆஹு: க்ஷேத்ரம் க்ஷேத்ரஜ்ஞ ஏவ ச

**பொருள்** – இந்த்ரியங்கள், மனம், புத்தி, ஸத்வகுணம், தேஜஸ், சக்தி, தைரியம், சரீரம், ஆத்மா ஆகிய அனைத்தும் வாஸுதேவனுடைய சரீரங்கள் ஆகும் என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

**அவதாரிகை** – இவ்விதம் தத்வசாஸ்த்ரங்கள் அனைத்தும் அவன் வசப்பட்டவை என்று கூறிய பின்னர், மந்தமான புத்தி உள்ளவர்களுடைய பயத்தை நீக்குவதற்காக அனுஷ்டான சாஸ்த்ரங்களும் அவன் வசப்பட்டவை என்கிறது.

ஸர்வ ஆகமாநாம் ஆசார: ப்ரதமம் பரிகல்பித:
ஆசார ப்ரபவோ தர்மோ தர்மஸ்ய ப்ரபு: அச்யுத:

**பொருள்** – சாஸ்த்ரங்கள் அனைத்திற்கும் சிறந்த ஒழுக்கமே முதன்மையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அந்த ஒழுக்கத்திலிருந்து உண்டாவது தர்மம் ஆகும். அந்தத் தர்மத்திற்கு அச்சுதனே ஸ்வாமி ஆவான்.

**பாஷ்யம்** – "ஸர்வ ஆகமாநாம்" என்றால் தர்மத்திற்கான ப்ரமாண சாஸ்த்ரங்கள் ஆகும். "ப்ரதமம் பரிகல்பித:" என்றால் மிகவும் முக்கியமான உபதேசிக்கப்படும் தர்மம் ஆகும். "ஆசார:" என்றால் ஒழுக்கம் மற்றும் நன்னடத்தை ஆகும். அப்படிப்பட்ட தர்மத்தால் போற்றப்பட வேண்டியவன் அச்சுதனே ஆவான். அவனே அந்த ஒழுக்கத்தில் நிலைநிற்கவும், அதற்கான பலனை அளிப்பவும் உதவுபவன் ஆவான்.

**அவதாரிகை** – தர்மத்தைப் பற்றி நிற்பவர்களும் அவனிடமிருந்தே உண்டானவர்கள் என்று கூறப்படுகிறது.

ரிஷய: பிதரோ தேவா மஹாபூதாநி தாதவ:
ஜங்கமாஜங்கம் சேதம் ஜகந்நாராயணோத்பவம்

**பொருள்** – ரிஷிகளும், பித்ருக்களும், தேவர்களும், பஞ்சபூதங்களும், அவற்றின் செயல்களாகிய இன்பங்களும், தாவரங்களும் ஆகிய அனைத்து உலகங்களும் நாராயணனிடமிருந்தே உண்டாயின.

**பாஷ்யம்** – இங்கு "ரிஷய:" என்றால் ஸ்ம்ருதிகள் போன்றவற்றை உண்டாக்கிய மனு முதலானவர்கள் மற்றும் அவற்றை த்யானித்து பின்பற்றுபவர்கள் ஆவர்.

“பிதர: தேவோ” என்றால் மற்ற தேவதைகள் ஆவர். “மஹாபூதாநி” என்றால் ஆகாயம் மற்றும் உள்ள நான்கு பூதங்கள் ஆகும். “தாதவ:” என்றால் தர்மங்களை அனுபவிப்பதற்காக உண்டான தோல் முதலானவை ஆகும். “ஜங்கம அஜங்கமம்” என்றால் பலன்களை அனுபவிக்கும் அசையும் அற்றும் அசையாத உலகம் ஆகும்.

**அவதாரிகை** – அடுத்து அனைத்து ஞானத்திற்கும் அவனே காரணம் எனப்படுகிறது.

யோகோ ஞானம் ததா ஸாங்க்யம் வித்யா: சில்பாதி கர்ம ச
வேதா: சாஸ்த்ராணி விஜ்ஞாந மேதத்ஸர்வம் ஜநார்த்தநாத்

**பொருள்** – கர்மயோகம், பக்தியோகம் ஆகியவற்றின் அறிவும், ஸாங்க்யம் எனப்படும் ஞானயோகமும், தர்க்கம் வியாகரணம் போன்ற வித்யைகளும், சில்பங்களும், வர்ணாச்ரம தர்மங்களும், வேதங்களும், ஸ்ம்ருதிகளும், இதிஹாஸ புராணங்கள் என்னும் சாஸ்த்ரங்களும் ஆகிய பலவிதமான ஞானமும் ஜநார்த்தனனிடமிருந்தே உண்டாயின.

**பாஷ்யம்** – ஞானம் என்றால் சாஸ்த்ரம்; “யோகோ ஞானம்” என்றால் சாஸ்த்ரங்கள் குறித்த ஞானம். யோகம் என்பது இரண்டுவிதம் – ஸமாதியோகம் மற்றும் கர்மயோகம். ஸாங்க்யம் என்றால் தத்துவங்களைக் குறித்து அறிவிக்கும் பிரிவாகும். வித்யா இலக்கணம் போன்றவை குறித்து அறிவதாகும். மேலும் வில்வித்தை, மருத்துவம், இசை, ஆடல் போன்றவையும் வித்தை எனப்படும். சில்பம் என்றால் செதுக்குதல், கட்டுமானம் போன்றவை ஆகும். கர்மம் என்றால் அனைத்து செயல்பாடுகளும் ஆகும். வேதங்களே அனைத்திற்கும் முன்னோடி ஆகும். சாஸ்த்ரங்கள் என்றால் ஸ்ம்ருதி, இதிஹாஸம் புராணம் ஆகும். இவை அனைத்தும் ஜனார்த்தனனிடமிருந்தே வருகின்றன.

**அவதாரிகை** – அடுத்து மஹாவிஷ்ணுவின் இரண்டு விபூதிகளையும் நிர்வகிக்கும் தன்மையை அருளிச்செய்கிறார்.

ஏகோ விஷ்ணுர் மஹத்பூதம் ப்ருதக் பூதாந்யநேகச:
த்ரீந்ல்லோகாந் வ்யாப்ய பூதாத்மா புங்க்தே விச்வபூகவ்யய:

**பொருள்** – பெரும்பொருளாகிய மஹாவிஷ்ணு, பலவாகப் பிரிந்துள்ள பூதங்களையும், மூன்று உலகங்கள் எனப்படும் பத்தர், முக்தர், நித்யர் என்னும் மூன்றுவகை சேதனர்களையும் வியாபித்து, அனைத்து பிராணிகளுக்கும் அந்தர்யாமியாக உள்ளபோதிலும் அவற்றின் தோஷங்கள் ஏதும் அடையாதவனாக அனைத்தையும் காப்பாற்றி அனுபவிக்கிறான்.

**பாஷ்யம்** – ஏக: என்றால் மஹாவிஷ்ணு தனித்தன்மை உள்ள ஒருவன்; அநேக: என்றால் எண்ணற்ற ரூபம், செயல்பாடுகள், மாறுபாடுகள், பிரயோஜனங்கள் கொண்டுள்ள தனித்தனியான வேறுபட்ட பூதங்கள்; இவை அனைத்திலும் மூன்று லோகங்களிலும் அவன் பரவி நிற்கிறான். பந்தத்தில் உள்ள ஜீவாத்மா, முக்தாத்மா மற்றும் நித்யர் ஆகியவையே மூன்று லோகங்களில் உள்ள ஆத்மாக்கள். அவை அனைத்தையும் கட்டுப்படுத்தி, அவற்றின் எஜமானனாக உள்ளதால், அவையுடைய ஆத்மாவாக மஹாவிஷ்ணுவே உள்ளான். அவனே அவற்றைக் காப்பவன் ஆவான். ஆனால் அவையுடைய தோஷங்களால் தீண்டப்படாதவன் ஆகிறான். தனது மேன்மை காரணமாக மஹத்பூதம் ஆகிறான். வாக்கு மற்றும் மனம் ஆகியவற்றுக்கு அப்பால் உள்ளான். புங்க்தே என்றால் லீலாரஸம் மற்றும் போகரஸம் ஆகியவற்றை அனுபவிக்கிறான் என்று பொருள்.

**அவதாரிகை** – அடுத்து அளவற்ற மகிமை உள்ள பகவான் இந்த ச்லோகத்திற்கு விஷயமாகிறான். அவனைக் காட்டிலும் உயர்ந்த ஞானம் மற்றும் வாக்கு கொண்டவரான வேதவ்யாஸர் இந்த ச்லோகத்தை உரைத்தார். அவர்கள் இருவருடைய (பகவான், வ்யாஸர்) மங்களகரமான மகிமையை இந்த ச்லோகம் கூறுகிறது. இதனைக் கொண்டு தங்களுடைய வறுமையைப் போக்கிக் கொள்ள நிற்கும் அனைவருமே இதற்கு அதிகாரிகள் ஆவர். ஆகவே உயர்ந்தும் தாழ்ந்தும் உள்ளதான அனைத்துவிதமான பொருள்களையும் அடைய விரும்பும் ஒருவன் யாராக இருந்தாலும், இந்த ச்லோகத்தை ஐயம் இன்றிக் கூறலாம் எனப்படுகிறது.

இமம் ஸ்தவம் பகவதோ விஷ்ணோ வ்யாஸேந கீர்த்திதம்
படேத்ய இச்சேத் புருஷ: ச்ரேய: ப்ராப்தும் ஸுகாநி ச

**பொருள்** – ச்ரேயஸ் எனப்படும் முக்தியையும், மற்ற பல சுகங்களையும் அடைய எண்ணும் ஒருவன், வேதவ்யாஸரால் அருளிச்செய்யப்பட்டதும், பகவானாகிய மஹாவிஷ்ணுவைக் குறித்தும் உள்ளதான இந்த ஸ்தோத்ரத்தைப் படிப்பானாக.

**அவதாரிகை** – ஸ்வபாவத்தாலேயே சுகம்-துக்கம், நன்மை-தீமை என்பது போன்று இரட்டைகளாக உள்ள அனைத்து கல்யாணகுணங்களுக்கும் இருப்பிடமாக உள்ளவனும், அடியார்களுக்குக் கற்பகமரம் போன்றுள்ளவனும், தாமரை போன்று சிவந்து மலர்ந்த திருக்கண்களைக் கொண்டவனும், மஹாலக்ஷ்மியின் நாயகனும் ஆகிய ஸர்வேச்வரனை வணங்குபவர்களுக்கு அவனே அனைத்துமாக உள்ளான்; ஆகவே அவனை வணங்குபவர்களுக்கு கிட்டக்கூடியவை சொல்லிற்கும் எட்டாதபடியே உள்ளன. இப்படி உள்ளபோது, அவனை வணங்காமல் பிறப்பு-இறப்பு என்னும் சுழற்சியில் உழல்வது ஏன் என்று நிறைவு செய்கிறார்.

விச்வேச்வரம் அஜம் தேவம் ஜகத: ப்ரபும் அவ்யயம்
பஜந்தி யே புஷ்கராக்ஷம் ந தே யாந்தி பராபவம்
ந தே யாந்தி பராபவம் ஓம் நம இதி

**பொருள்** – அனைத்து உலகங்களுக்கும் ஈச்வரனும், பிறப்பற்றவனும், அனைத்து ஆனந்தங்களைக் காட்டிலும் ஆனந்தம் உள்ளவனும், இந்த உலகங்களின் ஸ்ருஷ்டி-இருப்பு-அழிவு ஆகியவற்றுக்குக் காரணமானவனும், செந்தாமரைக்கண்கள் கொண்டவனும் ஆகிய ஸ்ரீமந்நாராயணனை உபாஸிப்பவன் யாராக இருந்தாலும் அவன் எதிலும் தோல்வி அடையமாட்டான், அவமானம் அடையமாட்டான். இரண்டாவது முறையாக இறுதியாக உள்ள வரியைக் கூறியதால், “தோல்வி அடையமாட்டான், அவமானம் அடையமாட்டான்” என்று உறுதிபடக் கூறியதாயிற்று.

**பாஷ்யம்** – அனைத்துவிதமான நன்மைகளையும் அளிக்கவல்லதும், ச்ருதி மற்றும் ஸ்ம்ருதியில் உள்ளவற்றை ஆதாரமாகக் கொண்டதும் ஆகிய இந்த ஸஹஸ்ரநாமத்தைக் குறித்த வியாக்யானம் ஸர்வேச்வரனுடைய திருவடிகளில் சமர்ப்பணம் செய்யப்பட்டது.

அஸ்மாகம் அத்ர ச பரத்ர ச ஸர்வ துக்கம்
உந்மூல்ய ஸம்பதம் அசேஷவிதாம் விதாய
ஸ்ரீரங்கராஜமஹிஷீ ஸ ச வைஷ்ணவாநாம்
ஸங்காத் ஸுகம் ஸஹ ஜயேந ஸதா க்ரியாஸ்தாம்

**பொருள்** – ஸ்ரீரங்கநாதனுடைய பட்டமஹிஷியான ஸ்ரீரங்கநாச்சியாரும், ஸ்ரீவைஷ்ணவர்களுடைய சேர்க்கையும் நமக்கு இம்மையிலும் மறுமையிலும் அனைத்து துன்பங்களையும் நீக்கி, அனைத்துவிதமான ஐச்வர்யங்களை உண்டாக்கி, எப்போதும் வெற்றியுடன் கூடிய இன்பத்தை அளிப்பதாக.

இப்படியாக ஹாரீத குலத்திற்குத் திலகம் போன்ற ஸ்ரீவத்ஸாங்கர் என்னும் கூரத்தாழ்வானின் திருக்குமாரரும், ஸ்ரீரங்கநாதனின் தெய்வீக ஆணையால் ஸ்ரீபாராசரபட்டர் என்னும் பெயர் பெற்றவரும் ஆகிய ஸ்ரீரங்கநாதன் அருளிச்செய்த பகவத் குண தர்ப்பணம் என்ற ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம் ஸம்பூர்ணம்.

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத ப்ரப்ரஹ்மணே நம:
ஸ்ரீரங்க திவ்யதம்பதிகளைச் சரணம் அடைந்த இராமாநுசன் திருவடிகளே சரணம்
இராமாநுசன் திருவடிகளைச் சரணம் புகுந்த ஸ்வாமி பராசரபட்டர் திருவடிகளே சரணம்
அழகியமணவாளன் திருவடிகளே சரணம்
ஸ்வாமி பராசரபட்டர் திருவடிகளே தஞ்சம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

பகவத் ராமானுஜர் அருளிச் செய்த

# ஸ்ரீபாஷ்யம்

(பகுதி – 180)

## முதல் அத்யாயம் இரண்டாம் பாதம் – அந்யயோக வ்யவச்சேத பாதம்

### முன்னுரை

முதல் அத்யாயத்தின் முதல் பாதத்தில் கூறப்பட்டது என்னவென்றால் – ப்ரஹ்மத்தைக் குறித்த விசாரத்தில் முனையும் ஒருவன் வேதங்களைச் சிறப்பாக அத்யயனம் செய்து, ஜைமினியின் கர்மமீமாம்ஸை குறித்து தெளிவாக அறிந்து, அதன் மூலம் கர்மத்தைப் பற்றி உணர்ந்து, அந்தக் கர்மங்கள் அனைத்தும் (ப்ரஹ்மத்தைக் குறித்து ஏதும் அறியாத விதத்தில் இயற்றப்படும்போது) அற்பமானதும் அழியக்கூடியதும் ஆகிய பலன்களையே அளிக்கின்றன என்று உணர்கிறான் (அல்லது உணரவேண்டும்). அதன் பின்னர் ப்ரஹ்மத்தைக் குறித்த விசாரம் மற்றும் த்யானம் என்பதில் ஈடுபட்டு, அதன் மூலம் கிட்டும் பலன்கள் நித்யமானவை என்றும், எண்ணற்றவை என்றும் உணர்ந்து, அப்படிப்பட்ட ப்ரஹ்ம உபாஸனத்தின் விளைவாக வேதாந்தங்களை நன்றாக அறிந்து, அதன் காரணமாக அவற்றில் கூறப்பட்டதான மனித வாழ்வின் உயர்ந்த லட்சியமான (புருஷார்த்தம்) மோக்ஷம் என்பதில் ஆசை கொள்கிறான். அதன் பின்னர் வேத வேதாந்த வாக்கியங்களும், அவற்றில் உள்ள சொற்களும் முன்பே அறியப்பட்ட வஸ்துவைப் பற்றிய ஞானத்தையே உணர்த்துகின்றன என்றும், அப்படிப்பட்ட வேதாந்த வரிகளே ப்ரஹ்மத்தைக் குறித்த ஞானத்தை ஏற்படுத்தவல்ல ப்ரமாணங்கள் என்றும் அறிகிறான். அப்படிப்பட்ட மனிதன் ப்ரஹ்மமானது எவ்விதம் வேதாந்தங்கள் மூலம் அறியப்படுகிறது என்பதை விளக்குவதான சாரீரமீமாம்ஸையை

அறியவேண்டும் என்று கூறப்பட்டது.

அதன் பின்னர் உள்ள இரண்டாம் அதிகரணத்தில் உள்ள தைத்ரிரீயம் (2-1-1) - யதோ வா இமாநி பூதாநி - எந்த ஒன்றிலிருந்து இவை அனைத்தும் தோன்றினவோ - என்ற வரியானது நமக்கு என்ன உணர்த்துகிறது என்றால், ப்ரஹ்மமே ஆனந்தம் அளிக்கவல்ல மோக்ஷத்தையும், அனைத்து உலகங்களில் ஸ்ருஷ்டி – ஸ்திதி - ஸம்ஹாரம் என்பதையும் அளிக்கவல்ல காரணமாக உள்ளது; எண்ணற்ற சேதன அசேதன வஸ்துக்களான இன்பம் அனுபவிப்பவை, இன்பம் அளிப்பவை என்பதைச் சரீரமாகக் கொண்டது – என்பதாகும்.

*

தென்னரங்கன் திருவடிகளே சரணம்
தென்னரங்கன் செல்வம் முற்றும் திருத்தி வைத்த இராமாநுசன்
திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீவேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(பகுதி – 180)

**மூலம்** – இவ்விடத்தில், "நந்தவ்ய: பரம: சேஷீ" என்கையாலே நமஸ்ஸுக்குப் பரமசேஷியே ப்ரதிஸம்பந்தியென்னுமிடம் ஸ்வத: ப்ராப்தம். பரமசேஷி இன்னாரென்று தெளிகைக்காக விசேஷ நாமதேயம். இங்கு "அசாஸ்த்ரீயோபஸேவா து தத்விகாத உதீர்யதே" என்றும், "தத்வியாகாதோ நிராக்ருதி:" என்றும் சொன்ன வசநங்களுக்குப் ப்ரபத்தி காலத்தில் புத்திபூர்வ ப்ராதிகூல்யம் நடக்குமாகில் ஆநுகூல்ய ஸங்கல்பமும் ப்ரதிகூல்யத்தில் அபிஸந்தி விராமாதிகளும் இல்லையாயிற்றாமென்று தாத்பர்யம். ப்ரபத்த்யுத்தர காலத்தில் புத்திபூர்வ ப்ராதிகூல்யம் நடந்ததாகில் இவன் ருசியோடு பொருந்தின ஸ்வதந்த்ர்ய பகவதாஜ்ஞைக்கு விருத்தமாம்.

**விளக்கம்** – இங்கு அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில் (52-7) - நந்தவ்ய: பரம: சேஷீ – வணங்கப்படுபவனே உயர்ந்தவன் என்றும், சேஷி என்றும் கூறப்படுகிறான் – என்று கூறுவதால், "நம:" என்பதற்குத் தொடர்புடையவன் அந்த உயர்ந்த எஜமானனே என்பது பொருத்தமாகவும் உறுதியாகவும் உள்ளது. அப்படிப்பட்ட உயர்ந்த எஜமானன் யார் என்று உணர்த்துவதற்காகவே அவனுடைய திருநாமங்கள் கூறப்படுகின்றன. மேலே கூறப்பட்ட அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை வரிகளில், அசாஸ்த்ரீயோபஸேவா து தத்விகாத உதீர்யதே – சாஸ்த்ரங்களில் தள்ளப்பட்டவற்றைச் செய்தல் இதற்கு விரோதமானது – என்றும், தத்வியாகாதோ நிராக்ருதி: - மற்ற உயிர்களுக்குக் கெடுதல் செய்தல் இதற்கு விரோதமானது என்றும் கூறப்பட்டது. இந்த வரிகளால் உணர்த்தப்படுவது என்ன? அதாவது ப்ரபத்தி செய்யும் நேரத்தில் அவனுக்கு விருப்பம் அல்லாதவற்றை அறிந்துகொண்டு செய்தால், "அவனுக்கு விருப்பமானவற்றைச் செய்தல்,

அவனுக்கு விருப்பம் அல்லாதவற்றைச் செய்யாமல் இருத்தல்" என்பதான எண்ணம் அடியுடன் இல்லை என்று கருத்து என்பதை விளக்குவதாகவே அந்த வரிகள் உள்ளன. ப்ரபத்திக்குப் பின்னர் ஸர்வேச்வரனுக்கு விருப்பம் அல்லாதவற்றைச் செய்தால், இவன் ப்ரபத்தி செய்யும்போது எந்த ஒரு பகவானின் ஆணைகளை விருப்பத்துடன் ஏற்றானோ, அதற்கு மாறாக நடப்பவன் ஆகிறான்.

**மூலம் –** இங்கு ஸ்தூலமான அர்த்தமாவது வ்யாகரணத்தைத் துவக்கி வருகிற ஸ்புட வ்யுத்பத்தியாலே தோற்றுமது. ஸூக்ஷ்மமாவது வர்ணஸாம்யாதிகளைக் கொண்டிழிகிற நிருக்தபலத்தாலே தோற்றுமது. பரமாவது ரஹஸ்ய சாஸ்த்ரங்களில் சொல்லுகிற அக்ஷர நிகண்டு ப்ரக்ரியையாலே தோற்றுமது.

**விளக்கம் –** மேலே கூறப்பட்ட அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை வரிகளின் ஸ்தூலமான பொருளானது (மேலோட்டமான பொருள் எனலாம்), இலக்கண ரீதியில் ஆராயப்படும் தெளிவான பகுதி மற்றும் விகுதிகளால் அறியப்படுவதாகும் (இதனால் ஸர்வேச்வரனைக் குறித்து தான் தாழ்ந்து நின்று வணங்குதல், ப்ரபத்தியை அதன் அங்கங்களுடன் இயற்றுதல் என்பது தேறும்). அந்த வரிகளின் ஸூக்ஷ்ம பொருளானது (மறைந்துள்ள பொருள் எனலாம்), எழுத்துக்களுடைய ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டுள்ள நிருக்தம் மூலம் அறியப்படுவதாகும் (இதனால் "நானும், எனக்குரியது என்று எண்ணப்படுபவையும் எனக்கு உரியவை அல்ல" என்பதும், "எனக்குச் சுதந்திரம் இல்லை" என்பதும் தேறும்). அந்த வரிகளின் மிகவும் உயர்ந்த பொருளானது இரகசியமான சாஸ்த்ரங்களில் கூறப்படும் பதங்களுடைய பொருள் மூலம் அறியப்படுவதாகும் (இதனால் ஸாத்தோபாயமான ப்ரபத்தி மூலம் அடையப்படும் பலன் ஸித்தோபாயமான ஸர்வேச்வரன் என்பது தேறும்).

**மூலம் -** இதில் முற்பட சேஷபூதனுக்கு ஸ்வத:ப்ராப்த வ்ருத்தியும் ஸாங்கந்யாஸரூபமான ஸாத்யோபாய சரீரமும் வகுத்தது. அநந்தரம் மோக்ஷோபாயாதிகாரிக்கு அவச்யாபேக்ஷிதமான நிரபேக்ஷ ஸ்வாதந்த்ர்யாதி நிவ்ருத்தி பூர்வக ஸ்வரூப சோதநம் பண்ணிற்று. பின்பு ஸாத்யோபாய விசேஷத்தாலே வசீகார்யமுமாய்ப் ப்ராப்யமுமாயிருக்கிற ஸித்தமிருக்கும்படியைச்

சொல்லிற்று. உபாயாந்தரங்களிற் காட்டில் ஸமர்ப்பணத்தினுடைய ப்ரதாநோபாயத்வம் சொல்லிற்றாகவுமாம். இவையெல்லாம் மேற்சொல்லப் புகுகிற வாக்யார்த்தங்களிலே யதாஸம்பவம் அநுஸந்தித்துக் கொள்வது.

**விளக்கம்** – இப்படியாக உள்ள மூன்றுவிதமான அர்த்தங்களில் முதலாவதான ஸ்தூல அர்த்தத்தில், ஸர்வேச்வரனுக்கு அடிமையாக உள்ள ஜீவாத்மாவின் இயல்பாக உள்ள வணங்குதலும், அந்த வணங்குதல் என்பதன் செய்கையான ஸாத்யோபாயத்தின் அமைப்பும் கூறப்பட்டது. அடுத்து இரண்டாவதாக உள்ள ஸூக்ஷ்ம அர்த்தத்தில், மோக்ஷத்தை விரும்பும் முமுக்ஷுவுக்கு அவசியம் இருக்கவேண்டியதான "எந்தச் சூழலிலும் சுதந்திரமானவன் அல்லன்" என்பதான ஸ்வரூபத்தின் நிலையை உணர்த்தியது. அடுத்து மூன்றாவதான அர்த்தத்தில் அடையப்படவேண்டிய இலக்காகவும், குறிப்பிட்ட உபாயம் மூலம் மட்டுமே அடையப்படக்கூடியவனும் ஆகிய ஸித்தோபாயமான ஸர்வேச்வரனுடைய ஸ்வபாவம் கூறப்பட்டது. அல்லது மற்ற அனைத்து உபாயங்களைக் காட்டிலும் சரணாகதி என்பதன் முதன்மை கூறப்பட்டது எனலாம். இவை அனைத்தையும் மேலே கூறப்படவுள்ள பத்துவிதமான யோசனைகளில் ஆங்காங்கு எவ்விதம் இயலுமோ அவ்விதம் கொள்க.

**மூலம் –**

ஏவம் சிக்ஷித நாநார்த்த நம: சப்த ஸமந்விதா:
ஸர்வே கரணதாம் யாந்தி மந்த்ரா: ஸ்வாத்மஸமர்ப்பணே

ஜீவஸாமாந்ய முகத: ச்ருங்க க்ராஹிகயாபி வா
மகாரௌ தார நமஸோ: ஸ்வாநுஸந்தாநதாவிஹ

இஹ யா ஸ்வாநுஸந்தாந ப்ரக்ரியைகஸ்ய தர்சிதா
அந்யேஷாமபி தத்ஸாம்யாத் நாந்யோந்யசரணா இமே

**பொருள் –**

- ஏவம் சிக்ஷித நாநார்த்த நம: சப்த ஸமந்விதா: ஸர்வே கரணதாம் யாந்தி மந்த்ரா: ஸ்வாத்மஸமர்ப்பணே – இப்படியாக "நம:" என்பதுடன் இணைக்கப்பட்டதான பல்வேறு அர்த்தங்கள் கொண்ட அனைத்து மந்த்ரங்களும், தன்னுடைய ஆத்மாவைச் சமர்ப்பிக்கும்போது செயல்படக்கூடிய மந்த்ரங்களாக உள்ளன.

- ஜீவஸாமாந்ய முகத: ச்ருங்க க்ராஹிகயாபி வா மகாரௌ தார நமஸோ: ஸ்வாநுஸந்தாநதாவிஹ – இந்த மூல மந்த்ரத்தில் ப்ரணவம் மற்றும் "நம:" ஆகிய இரண்டிலும் உள்ள "ம" என்னும் எழுத்து பொதுவாக ஜீவாத்மாவைக் கூறுவதன் மூலமாகவாவது அல்லது நேராகக் கொம்பைப் பிடித்தல் என்னும் நியாயம் காரணமாகவாவது (அஹம் என்பதால்), தன்னுடைய ஆத்ம ஸ்வரூபத்தைக் குறித்து எப்போதும் சிந்திப்பதை வெளிப்படுத்துவதாக உள்ளன.

- இஹ யா ஸ்வாநுஸந்தாந ப்ரக்ரியைகஸ்ய தர்சிதா அந்யேஷாமபி தத்ஸாம்யாத் நாந்யோந்யசரணா இமே – மூலமந்த்ரத்தில் எந்த ஒரு ஜீவனுக்கு தன்னுடைய ஸ்வரூபத்தை எண்ணவேண்டிய வகை உரைக்கப்பட்டதோ, மற்ற ஜீவாத்மாக்களுக்கும் அதே எண்ணவேண்டிய வகை ஒத்ததாக உள்ளதால், ஜீவாத்மாக்கள் ஒருவருக்கு ஒருவர் ரக்ஷகர் அல்லர்.

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாச்சியார் ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி பிள்ளை லோகாசார்யர் அருளிச் செய்த

# ஸ்ரீவசனபூஷணம்

இதற்கு ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்
(பகுதி – 139 - நிறைவுப்பகுதி)

462. பக்தியிலசக்தனுக்கு ப்ரபத்தி; ப்ரபக்தியிலசக்தனுக்கு இது.

**அவதாரிகை** - இப்படி ஸ்வதந்த்ரமான இவ்வுபாயத்துக்கு அதிகாரி யின்னாரென் றருளிச்செய்கிறார் "பக்தியில் அசக்தனுக்கு" என்று தொடங்கி.

**விளக்கம்** - இவ்விதம் சுதந்திரமான உபாயமாக உள்ள ஆசார்ய அபிமானம் என்பதற்கு அதிகாரி யார் என்று இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, "உபய பரிகர்மித ஸ்வாந்தஸ்ய" என்கிறபடியே ஜந்மாந்தர ஸஹஸ்ர ஸித்த கர்ம ஜ்ஞாந ஸம்ஸ்க்ருதாந்த: கரணனுக்கு ஜநிக்குமதாய் ஸ்வபாரதந்த்ர்ய விரோதியான ஸ்வயத்ந ரூபமா யிருக்கும் பக்த் யுபாயத்தில், துஷ்கரத்வ புத்தியாலும் ஸ்வரூப விரோதித்வ புத்தியாலும் நாமிதுக்கு சக்தரல்லரென்று கை வாங்கினவனுக்கு, நிவ்ருத்தி ஸாத்யதயா ஸுகரமுமாய் பகவத் பாரதந்த்ர்ய ரூப ஸ்வரூபாநுரூபமுமான ப்ரபத்த்யுபாயம்;

**விளக்கம்** – ஆளவந்தார் ஆத்மஸித்தியில் – உபய பரிகர்மித ஸ்வாந்தஸ்ய - கர்ம ஞானங்கள் என்பதுடன் கூடிய தூய்மையான மனம் கொண்டவனுக்கு - என்று கூறுவது போன்று ஆயிரக்கணக்கான முற்பிறவிகளில் ஈட்டப்பெற்ற கர்மம் மற்றும் ஞானம் ஆகியவற்றால் மனம் தூய்மை அடையப்பெற்றவனுக்கு உண்டாவதும், தனது முயற்சி என்பதால் தான் "ஸர்வேச்வரனுக்கு வசப்பட்டவன்" என்னும் எண்ணத்திற்கு விரோதியாக உள்ளதும் ஆகிய பக்தி உபாயத்தைக் காட்டிலும் –

இயற்றுவதற்கு மிகவும் கடினமானது என்னும் அறிவாலும், நமது ஆத்மாவின் ஸ்வரூபமான "ஸர்வேச்வரனுக்கு வசப்பட்டது" என்ற அறிவாலும், "நாம் இதனைச் செய்வதற்குரிய சக்தி உடையவன் அல்லோம்" என்று எண்ணி மற்ற உபாயங்களைக் கைவிட்ட ஒருவனுக்கு, மற்றவற்றைக் கைவிட்டதன் காரணமாகவே செய்வதற்கு எளியதாக உள்ளதால், பகவானுக்கு மட்டுமே வசப்பட்ட ஆத்மாவின் ஸ்வரூபத்துக்கு ஏற்றதாக இருக்கக்கூடிய ப்ரபத்தி உபாயமாகும் (அதாவது பக்தியைக் காட்டிலும் ப்ரபத்தி எளிய உபாயம்).

**வ்யாக்யானம் -** அத்யவஸாய ஜ்ஞாநரூபமான ப்ரபத்த் யுபாயத்தில் மஹாவிச்வாச முண்டாகை அரிதாகையாலும், பந்தமோக்ஷங்களிரண்டுக்கும் பொதுவான ஈச்வர ஸ்வாதந்த்ர்ய பயத்தாலும், நாமிதுக்கு சக்தரல்லவென்று தேங்கினவனுக்கும் பச்வாதிகளுக்கும் கார்யகரமாகையாலே விச்வாஸ ஸாபேக்ஷமுமன்றிக்கே மோக்ஷைக ஹேதுவுமா யிருக்கும் பரதந்த்ர ஸ்வரூபனான ஸதாசார்யானுடைய அபிமாந ரூபமான விந்த சரமோபாய மென்கை.

**விளக்கம் –** (அடுத்து ப்ரபத்தியைக் காட்டிலும் ஆசார்ய அபிமானம் எளியது என்று கூறுகிறார்) உறுதியான ஞானம் என்பதன் வடிவமாக உள்ள ப்ரபத்தி உபாயத்தைக் காட்டிலும் - மஹாவிச்வாஸம் என்பது உண்டாவது மிகவும் அரிது என்பதாலும், ஸம்ஸாரத்தில் பந்தப்படுத்துதல் மற்றும் அதிலிருந்து மோக்ஷம் அளித்தல் ஆகிய இரண்டிலும் ஸர்வேச்வரனுக்கு உள்ள சுதந்திரத்தை எண்ணி பயத்தாலும், "நாம் இந்த ப்ரபத்தி உபாயத்துக்குத் தகுதி உடையவர்கள் அல்ல" என்று எண்ணி பின் வாங்குபவர்களுக்கு, பசு முதலானவற்றுக்கும் மோக்ஷம் அளிப்பதால், மஹாவிச்வாஸம் போன்றவை அவசியம் இல்லாமல் உள்ளதால், மோக்ஷத்துக்கு மட்டுமே காரணமாக உள்ளதான ஆசார்ய அபிமானம் என்பது கடைசி உபாயமாக உள்ளது.

**வ்யாக்யானம் -** பக்தியி லசக்தனுக்கு துஷ்கரத்வ ஸ்வரூப விரோதித்வங்க ளிரண்டும் ஹேதுவாகிலும் இவ்விடத்தில் ஸ்வரூப விரோதித்வம் ப்ரதாந ஹேது; ப்ரபத்தியி லசக்தனுக்கு விச்வாஸமாந்த்ய பயமே ப்ரதாந ஹேது; "ஸ்வஸ்வாதந்த்ர்ய பயத்தாலே பக்தி நழுவிற்று; பகவத் ஸ்வாதந்த்ர்ய பயத்தாலே

ப்ரபத்தி நழுவிற்று" என்றிறே இவர் தாம் கீழருளிச்செய்தது. இத்தால், அந்யோபாயாசக்ததயா அநந்யகதியானவனே ப்ரபத்த்யதிகாரி யாமோபாதி, இவ்வுபாதிகாரியும் அந்யோபாயா சக்ததயா அநந்யகதியானவ னென்றதாய்த்து.

**விளக்கம் -** பக்தியோகத்தில் நிற்கலாம் என்றுள்ள ஒருவனுக்கு அந்த யோகத்தில் நிலைநிற்கத் தேவையான ஆற்றல் இல்லாத காரணத்தால் மிகவும் கடினமாக உள்ள நிலை, தனது முயற்சியால் பக்தி விளையும் என்பதன் காரணமாக "மற்றவர்களுக்கு ஆத்மா வசப்பட்டது" என்பதான ஆத்மஸ்வரூபத்துக்கு விரோதமான நிலை ஆகிய இரண்டு நிலைகளும் பக்தியோகம் நழுவக் காரணம் இருந்தாலும், ஆத்மஸ்வரூபத்துக்கு விரோதியாக இருத்தல் என்பதே அந்த நழுவுதலுக்கு முக்கியமான காரணமாகும். ப்ரபத்தியில் நிலை நிற்க எண்ணும் ஒருவனுக்கு - மஹாவிச்வாஸத்தில் உண்டாகும் குறைவு, ஸர்வேச்வரனின் சுதந்திரம் குறித்த பயம் ஆகிய இரண்டும் ப்ரபத்தி நழுவுவதற்குக் காரணமாக உள்ளபோதிலும், ஸர்வேச்வரனுடைய சுதந்திரம் குறித்த பயமே முக்கிய காரணமாக உள்ளது. சூர்ணை 444ல் – ஸ்வஸ்வாதந்த்ர்ய பயத்தாலே பக்தி நழுவிற்று – என்றும், 445ல் - பகவத் ஸ்வாதந்த்ர்ய பயத்தாலே ப்ரபத்தி நழுவிற்று – என்றும் இவர் அருளிச்செய்தார் அல்லவோ? ஆக இதன் மூலம், மற்ற உபாயங்களைக் கைக்கொள்ளத் தேவையான சக்தி இல்லாதவன், வேறு புகலிடம் இல்லாத காரணத்தால், ஆசார்ய அபிமானம் என்ற இந்த உபாயத்திற்கு அதிகாரி ஆகிறான்.

**வ்யாக்யானம் -** அன்றிக்கே, இதின் ஸ்வதந்த்ரத்வத்தை "பக்தியி லசக்தனுக்கு" இத்யாதியாலே ஸ்திரீகரிக்கிறாராகவுமாம். வாக்யார்த்த யோஜநையில் பேதமில்லை; பக்தியி லசக்தனைக் குறித்து விஹிதமான ப்ரபத்த்யுபாயம் ஸ்வதந்த்ரமானாப்போலே ப்ரபத்தியி லசக்தனைக் குறித்து விஹிதமானவிதுவும் ஸ்வதந்த்ரமாக குறையில்லை யென்று கருத்து.

**விளக்கம் -** அல்லது வேறுவிதமாகவும் பொருள் உரைக்கலாம். ஆசார்ய அபிமானம் என்னும் இந்த உபாயம் சுதந்திரமானது என்பதை இந்தச் சூர்ணையில் உறுதி செய்கிறார் என்றும் பொருள் கூறலாம். இந்தச் சூர்ணைக்கான வ்யாக்யானத்தில்,

கடந்த இரண்டு மூன்று பத்திகளிலும், இந்தப் பத்தியிலும் கூறப்பட்ட பொருள்களில் எந்தவிதமான வேறுபாடும் இல்லை. பக்தியோகத்தில் ஆற்றல் இல்லாதவனுக்காக விதிக்கப்பட்ட ப்ரபத்தி உபாயமானது சுதந்திரமான உபாயம் என்பது போன்று, ப்ரபத்தியில் ஈடுபட ஆற்றல் இல்லாதவனுக்காக விதிக்கப்பட்ட ஆசார்ய அபிமானமும் சுதந்திரமானது என்று கூறுவதற்கு எந்தக் குறையும் இல்லை.

463. இது ப்ரதமம் ஸ்வரூபத்தைப் பல்லவிதமாக்கும், பின்பு புஷ்பிதமாக்கும், அநந்தரம் பலபர்யந்தமாகும்.

**அவதாரிகை -** இவ்வாசார்யாபிமாந மிவனுக் குண்டாக்கும் பல பரம்பரையை யருளிச்செய்து, இவ்வர்த்தத்தை நிகமித்தருளுகிறார் (இது) என்று தொடங்கி.

**விளக்கம் -** இந்த ஆசார்ய அபிமானம் என்பது இந்த அதிகாரிக்கு அளிக்கும் பல பயன்களை அருளிச்செய்து, தொடர்ந்து ஆசார்ய அபிமானம் குறித்த இந்த ஆழ்பொருளை இந்தச் சூர்ணை மூலம் முடித்தருளுகிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, இப்படி கீழ்ச்சொன்ன ஆசார்யாபிமாநமாகிற விது, ப்ரதமத்திலே இச்சேதநனுக்கு ப்ரணவோக்த பகவதநந்யார்ஹ சேஷத்வத்தைச் சரமபர்வ பர்யந்தமாக உணர்த்தி, அநாதிகாலம் ஸ்வாதந்த்ர்யமாகிற அழிலிலே மண்டிச் சருகெழுந்து கிடந்த ஸ்வரூபத்தைத் துளிர்த்தெழும் படியாக்கும்; இப்படி பல்லவிதமான பின்பு, மத்யமபதோக்தாநந்ய யோகத்தாலே ஸ்வரூபத்தை புஷ்பிதமாம்படியாக்கும்; இப்படி புஷ்பிதமான வநந்தரம், சரமபதோக்தாநந்ய போகத்வத்தையும் சரமபர்வ பர்யந்தமாக உணர்த்தி, நித்ய கைங்கர்ய போகத்தாலே ஸ்வரூபத்தை பலபர்யந்தமாம் படியாக்கு மென்றபடி.

**விளக்கம் -** இவ்விதம் மேலே கூறப்பட்ட ஆசார்ய அபிமானம் என்னும் இது முதலில், ப்ரணவத்தால் கூறப்பட்டுள்ள ஸர்வேச்வரனுக்கு மட்டுமே ஜீவன் அடிமைப்பட்டுள்ளதை அடியார்களுக்கு அவன் அடிமையாக உள்ள தன்மை முடிய ஜீவனுக்கு உணர்த்துகிறது; அதன் மூலம் எல்லையற்ற காலமாக “நான் எனக்கு

மட்டுமே அடிமை" என்னும் எண்ணமாகிற தீயில் விழுந்து ஒரு பொருள் என்று கூற இயலாதபடி இருந்த ஜீவனுடைய ஸ்வரூபத்தை தளிர்விட்டு முளைக்கும்படிச் செய்யும். இவ்விதம் துளிர்த்த பின்னர், திருமந்த்ரத்தின் நடுப்பதமான "நம:" என்பதால் கூறப்படுவதான "ஜீவன் மற்ற யாரையும் சரணம் புகத் தகுதி அற்றவன்" என்பதை இறுதி நிலை முடிய உணர்த்துகிறது; தொடர்ந்து பழம் உண்டாகப் போகிறது என்பதை வெளிப்படுத்தும் அறிகுறியாக உள்ள மலர் போன்று, பலன் ஏற்படுத்துவதற்கு அறிகுறியான உபாயத்தில் கொள்ளும் உறுதியான ஞானம் என்பதை மலரச் செய்கிறது. இவ்விதம் மலரச் செய்த பின்னர் திருமந்த்ரத்தின் கடைசி பதமான "நாராயணாய" என்பதால் கூறப்படும் கருத்தான "ஸர்வேச்வரனுடைய ஆனந்தம் தவிர ஜீவனாகிய தனக்கு வேறு ஆனந்தம் இல்லை" என்பதை இறுதி நிலை முடிய உணர்த்துகிறது; இப்படியாக எப்போதும் அவனுக்குக் கைங்கர்யம் செய்யும் இன்பத்தை அளிப்பதால் ஆத்மஸ்வரூபம் என்ற செடியில் பழம் உண்டாகும்படி செய்யும் என்று கருத்து.

**வ்யாக்யானம் -** ப்ரதம ரஹஸ்யமான திருமந்த்ரத்தில் பதத்ரய ப்ரதிபாத்யமான அநந்யார்ஹ சேஷத்வாத்யாகார த்ரயமு மாத்மாவுக்கு ஸ்வரூபமாய், அதுதான் சரமபர்வ பர்யந்தமாயிறே யிருப்பது; இவைதான் ஆசார்யோபதேசாதிகளாலே லப்தங்க ளாகையாலும் அவ்வுபதேசாதிகளுக்கடி இவன் நம்முடையவனென்கிற ஆசார்யாபிமாந மாகையாலும், ஆசார்யாபிமாந மிவற்றை யுண்டாக்கு மென்கிறது. ஆக, இப்படி யிருந்துள்ள பதத்ரயார்த்த நிஷ்டையை இவ்வாசார்யாபிமாந மிவனுக்குண்டாக்கி யுஜ்ஜீவப்பித்தே விடும்படி சொல்லிற்றாய்த்து.

**விளக்கம் -** மூன்று ரஹஸ்யங்களாக உள்ள திருமந்த்ரம், த்வயம் மற்றும் சரமச்லோகம் ஆகியவற்றில் முதன்மையாக உள்ள திருமந்த்ரத்தில் காணப்படும் மூன்று பதங்களில் (ஓம், நம:, நாராயணாய) கூறப்படுவதான அநந்யார்ஹ சேஷத்வம் (ஸர்வேச்வரன் தவிர ஜீவாத்மா யாருக்கும் அடிமை இல்லை), அநந்ய சரணத்வம் (ஸர்வேச்வரனை மட்டுமே சரணம் என்று கொண்டிருத்தல்), அநந்ய போக்யத்வம் (அவன் ஒருவனை மட்டுமே அனுபவிக்கத்தக்கவன் என்றிருத்தல்) என்னும் மூன்று தன்மைகளே ஆத்மாவுக்கு ஸ்வரூபமாக, அவை ஆசார்யன் வரை கொண்டு செய்ய வல்லதாக உள்ளன அல்லவோ? இவை ஆசார்யனுடைய

உபதேசம் மூலம் கிட்டப்பெறுபவை என்பதாலும், ஆசார்யன் அவ்விதம் உபதேசிப்பது “இவன் நம்முடையவன்” என்று எண்ணுவதாலும் இவற்றை ஆசார்ய அபிமானமே உண்டாக்கும் என்கிறது. ஆக இப்படியாக உள்ளதான திருமந்த்ரத்தில் காணப்படும் மூன்று பதங்களுடைய ஆழ்பொருளில் ஈடுபட்டு நிற்கும் நிலையை இத்தகைய ஆசார்ய அபிமானமே இவனுக்கு ஏற்படுத்தி, இவனைக் கரையேற்றிவிடும் என்று அருளிச்செய்ததாகக் கருத்து.

**வ்யாக்யானம் -** அதவா, இப்படி ஸ்வதந்த்ரோபாயமான விது இவன் ஸ்வரூபத்தை பர்வக்ரமேண உஜ்ஜீவிப்பிக்கும்படியை ப்ரகாசிப்பியா நின்று கொண்டு, இவ்வர்த்தத்தை நிகமித்தருளுகிறார் (இது) இத்யாதியாலே. அதாவது, ஆசார்யாபிமாநமாகிற விது, ப்ரதமம் பகவத் விஷயத்திலே அந்வயிப்பித்து, அநாதிகாலம் ததந்வய ராஹித்யத்தாலே “வாடினேன்” என்னும்படி உறாவிக் கிடந்த ஸ்வரூபத்தை பல்லவிதமாக்கும்; பின்பு, பாகவத விஷயத்திலே யூன்றுவித்து பலாந்வய யோக்யமாக்குகையாலே, பல்லவிதமா யிருந்தவத்தை புஷ்பிதமாக்கும்; அநந்தரம், “நின்று தன் புகழேத்த” என்கிறபடியே சரமபர்வத்தில் நிலைபெறுத்தி புஷ்பிதமா யிருந்தவத்தை பல பர்யந்தமாக்கு மென்னவுமாம்.

**விளக்கம் –** இந்தச் சூர்ணைக்கு வேறுவிதமாகவும் பொருள் அருளிச்செய்கிறார். சுதந்திரமான உபாயமாக உள்ள ஆசார்ய அபிமானம் என்ற உபாயம் ஆத்மஸ்வரூபத்தை ஒவ்வொரு நிலையாகக் கரை ஏற்றுவதை விளக்கும் விதத்தில் அருளிச்செய்கிறார் என்றும் கொள்ளலாம் (ஒவ்வொரு நிலை = முதலில் ஸர்வேச்வரனைப் பற்றுதல், அடுத்து அடியார்களைப் பற்றுதல், இறுதியாக ஆசார்யனைப் பற்றுதல்). ஆசார்ய அபிமானம் என்னும் இந்த உபாயம் முதலில் ஜீவனைப் பகவத் விஷயத்தில் ஈடுபடச் செய்யும். பின்னர் எல்லையற்ற காலம் அவனுடைய தொடர்பு இல்லாத காரணத்தால், பெரிய திருமொழி (1-1-1) – வாடினேன் வாடி - என்பதில் கூறியதற்கு ஏற்ப வாடிக் கிடந்த ஆத்ம ஸ்வரூபத்தை தளிர்க்கும்படிச் செய்யும். பின்னர் பாகவத விஷயத்தில் ஈடுபடும்படிச் செய்யும். பலன் பெறுவதற்கான தகுதியை ஏற்படுத்துவதன் மூலம் துளிர்த்த ஆத்ம ஸ்வரூபத்தை மலரச்செய்யும். பின்னர், கண்ணிநுண்சிறுத்தாம்பு (6) – நின்று தன் புகழேத்த – என்பதில் கூறுவதற்கு ஏற்ப இறுதி நிலையான ஆசார்ய அபிமானத்தில்

நிலை நிறுத்தி, மலர்ந்திருந்த ஆத்மஸ்வரூபம் என்னும் செடியில் பழத்தை உண்டாக்கும் என்றும் பொருள் கூறலாம்.

**வ்யாக்யானம் -** ஆக, இப்பரகரணத்தால், ஆசார்யனை உபாயமாகப் பற்றினார்க்கு பயா பயங்களிரண்டும் மாறி மாறி நடக்குமென்னும் ப்ரஸங்கமில்லாமையும், இவ்வர்த்த நிர்ணாயக ப்ரமாண மின்னதென்னுமதும், இவ்வர்த்த ஸ்தாபநத்துக்கீடான உபபத்தியும், ஐதிஹ்யமும், இவ்வர்த்தோபபாதநார்த்தமாக ப்ராப்ய நிர்ணயமும், இப்படி ப்ராப்ய நிர்ணயம் பண்ணினால் இதுக்கு ஸத்ருசமாகவே கொள்ளவேணும் ப்ராபகமென்னுமதும், அல்லாதபோது வரும் தூஷணமும் ஈச்வர விஷயத்திலிவனுக்குள்ள சரணவத் பாரதந்த்ர்யாநந்யத்வங்களை ஸூசிப்பித்துக் கொண்டு ஈச்வரனைப் பற்றுமதில் இவனைப் பற்றுமதுக்குள்ள விசேஷமும், ஈச்வர சேதநர்களிருவர்க்கு மிவனுபகாரக னென்றும், ஈச்வரனு மாசைப்படும் பதத்தையுடையவனென்னும், இவன் பண்ணு முபகாரத்துக்கு ஸத்ருச ப்ரத்யுபகாரமில்லை யென்றும், இவ்வாசார்ய வைபவமும், ஆத்மகுணமுண்டானாலும் ஆசார்ய ஸம்பந்தத்தை நெகிழில் அந்தப்ரயோஜநமும் அவத்யகரமும் ஈச்வர நிக்ரஹஹேதுவுமாம்படியும், ஆசார்ய ஸம்பந்த விச்சேதத்தில் பகவத் ஸம்பந்த தௌர்பல்யமும், ஆசார்யாந்வயத்துக்கும் பாகவத ஸம்பந்த மபேக்ஷிதமென்னுமதும், ஆசார்யாபிமாநமொழிய உஜ்ஜீவநோபாயமில்லை யென்னுமிடத்தில் ஆப்தோபதேசமும், இவ்வர்த்தத்தினுடைய ஸ்திரீகரணமும், இவ்வாசார்யாபிமாந நிஷ்டனானவன் ஸுலபமான இவ்விஷயத்தைவிட்டு துர்லபமான பகவத் விஷயத்தை ரக்ஷகமாக இச்சிக்கக் கடவனல்லனென்றும், பரத்வாதி ப்ராப்ய ஸ்தலங்களெல்லா மிவ்விஷயமே யென்றிருக்கக் கடவனென்றும், இவனுக்கு ப்ரதிகூலாநுகூலாபய ரின்னாரென்றும், இவனுடைய ஜ்ஞாநாநுஷ்டாநங்களுக்கு விநியோகமும், இவனுக்கு நிஷித்தாநுஷ்டாநமும் விஹிதபோகாதிகளும் த்யாஜ்யமென்னு மிடமும், ஸ்வரூபப்ரச்யுதி வாராமைக்கு வேண்டுமவஸ்தையும், ப்ராப்யபூமி ப்ராவண்யாதித்ரயமு மிவனுக்கவச்யாபேக்ஷித மென்னுமதும், ஆசார்ய விஷயத்தில் ஸ்வகத பரகத ஸ்வீகாரோபாயத்வய ப்ரமாணங்களும், ஆசார்யாபிமாநத்தின் ஸ்வதந்த்ரோபாயத்வமும், தததிகாரி நிர்ணயமும், இவ்வாசார்யாபிமாந மிச்சேதநனுக் குண்டாக்கும் பலபரம்பரையையும் சொல்லுகையாலே, ஸதாசார்யாபிமாநமே ஸர்வர்க்கு

முத்தாரக மென்னுமிடமும் சொல்லப்பட்டது. ஆக இத்தால் வாக்ய த்வயோக் தோபாயோபேய சரமாவதியை அருளிச்செய்தாராய்த்து.

**விளக்கம்** – ஆக இந்த ப்ரகரணத்தின் மூலம் கீழே உள்ள பலவற்றையும் உரைத்து, ஆசார்ய அபிமானம் ஜீவனுக்கு உண்டாக்கும் பலன்களையும் கூறுவதன் காரணமாக, நல்ல ஆசார்யனை அடைதல் என்பதே அனைவரையும் கரையேற்றும் என்பதைக் கூறுகிறார் என்று கருத்து:

- ஆசார்யனை உபாயமாகப் பற்றியவர்களுக்கு அச்சம், அச்சம் இன்மை ஆகிய இரண்டு நிலைகளும் மாறி மாறி உண்டாகும் என்னும் நிலைக்கு இடமே இல்லை என்றும்
- மேலே கூறப்பட்ட கருத்திற்கான ப்ரமாணம் இன்னது என்றும்
- இந்தக் கருத்தை உறுதி செய்வதற்கான தகுந்த விளக்கம், அதற்கான நிகழ்வு, இந்தக் கருத்தை விளக்குவதற்குத் தேவையான பேற்றினைக் குறித்த நிர்ணயம், இவ்விதம் பேற்றினை நிர்ணயம் செய்யும்போது அதற்கு ஏற்றபடி உபாயத்தைக் கூறவேண்டும், இவ்விதம் கூறாதபோது உண்டாகும் தோஷம் இன்னது என்றும்
- ஸர்வேச்வரன் விஷயத்தில் இந்த ஆசார்யன் அவனுடைய திருவடி போன்று அடிமைப்பட்டவர் என்பதையும், வேறுபடாதவர் என்பதையும் உணர்த்தி, ஈச்வரனைப் பற்றுவதைக் காட்டிலும் இந்த ஆசார்யனைப் பற்றுவதில் உள்ள சிறப்பு இன்னது என்றும்
- ஈச்வரன், ஜீவன் ஆகிய இருவருக்கும் இந்த ஆசார்யனே உதவி செய்கிறார் என்றும், ஆசார்யன் என்னும் பதவியை ஸர்வேச்வரனும் விரும்புகிறான் என்றும், ஆசார்யன் செய்யும் உபகாரத்திற்கு ஈடு செய்யக் கூடியது ஏதும் இல்லை என்றும், ஆசார்யனோடு உள்ள ஸம்பந்தம் மோக்ஷத்திற்குக் காரணமாகிறது என்றும், ஈச்வரனை நமக்குக் காண்பித்துக் கொடுத்த ஆசார்யனைக் காட்டிலும் ஆசார்யனை நமக்கு அளித்த ஈச்வரனே பெரும் உபகாரம் செய்தவன் என்றும்

- ஆசார்யனுடைய பெருமையும், ஜீவனுக்கு ஆத்மகுணம் இருந்தாலும் ஆசார்ய ஸம்பந்தம் இல்லையென்றால் பயனற்றது என்றும், அதுவே ஈச்வரன் இவனைத் தள்ளக் காரணமாகிவிடும் என்றும்
- ஆசார்ய ஸம்பந்தம் இல்லை என்றால் ஈச்வரனுடன் ஸம்பந்தம் கிட்டாது என்றும். ஆசார்ய ஸம்பந்தம் உண்டாவதற்குப் பாகவத ஸம்பந்தம் அவசியமானது என்றும்
- ஆசார்ய அபிமானம் அல்லாமல் கரையேற வேறு உபாயம் இல்லை என்று உண்மையைக் கூறும் சான்றோர்களே செய்த உபதேசத்தையும், இந்தக் கருத்தின் உறுதியையும், இப்படிபட்ட ஆசார்ய அபிமானம் என்பதில் ஆழ்ந்துள்ளவன் எளியதாக உள்ள இதனைக் கைவிட்டு அரிதாக உள்ள ஸர்வேச்வரனை ரக்ஷகமாக எண்ணக்கூடாது என்றும்
- பரம், வ்யூஹம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என்பதான அடையத் தக்க ஐந்து நிலைகளும் இந்த ஆசார்யனே ஆவார் என்று இருத்தல் வேண்டும் என்பதையும், இப்படிப்பட்ட ஒருவனுக்கு விரோதிகள் மற்றும் நண்பர்கள் இன்னவர்கள் என்பதையும்
- ஆசார்ய அபிமானத்தில் ஆழ்ந்துள்ள அதிகாரியின் ஞானம் மற்றும் ஒழுக்கங்கள் ஆகியவற்றின் உபயோகமும்
- இவனுக்கு சாஸ்த்ரங்களால் தடுக்கப்பட்டவையான மற்றவர் மனைவியை நாடுதல், விதிக்கப்பட்டதான தனது மனைவியை நாடுதல் போன்றவை கைவிடத்தக்கவை என்றும், தனது ஸ்வரூபத்தை இழக்காமல் இருப்பதற்காக இருக்கவேண்டிய நிலை இன்னது என்றும்
- அடைய வேண்டியதான பரமபதம் என்பதில் மிகுந்த ஈடுபாடு அவசியம் என்றும், ஆசார்யன் விஷயத்தில் “தான் ஆசார்யனைப் பற்றும் பற்றுதல், ஆசார்யன் தன்னைப் பற்றும் பற்றுதல்” ஆகிய இரண்டும் உபாயமாக உள்ள தன்மைக்கான ப்ரமாணம் இன்னது என்பதையும், ஆசார்ய அபிமானம் சுதந்திரமான உபாயம் என்பதையும், அதற்கான அதிகாரிகள் இன்னவர்கள் என்பதையும், ஆசார்ய அபிமானம் உண்டாக்கவல்ல பலன்கள் இன்னவை என்பதையும், ஆசார்யனை அடைதலே அனைவருக்கும் மோக்ஷம் அளிக்கவல்லது என்பதையும் கூறினார்.

இப்படியாக இந்த ப்ரகரணத்தில் த்வய மந்த்ரத்தில் கூறப்படும் இரண்டு வரிகளாலும் உரைக்கப்பட்ட உபாயத்தின் எல்லை (ஆசார்ய அபிமானம்), உபேயத்தின் எல்லை (ஆசார்யனின் முகமலர்ச்சி) ஆகிய இரண்டையும் அருளிச்செய்தார்.

சரம ப்ராப்ய ப்ராபக ப்ரகரணம் ஸம்பூர்ணம்

ஸ்ரீவசனபூஷண வ்யாக்யானம் ஸம்பூர்ணம்

ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாதன் திருவடிகளே சரணம்

ஸ்ரீபெருந்தேவி ஸமேத ஸ்ரீவரதராஜன் திருவடிகளே சரணம்

திருவரங்கத் திவ்ய தம்பதிகளைத் தஞ்சம் அடைந்த நம் இராமாநுசன் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

# திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 146)

2-6-4 வள்ளலே! மதுசூதனா! என் மரதகமலையே! உனைநினைந்
தெள்கல்தந்த வெந்தாய்! உன்னை யெங்ஙனம் விடுகேன்
வெள்ளமே புரை நின்புகழ் குடைந்தாடிப் பாடிக் களித் துகந்துகந்து
உள்ளநோய்களெல்லாம் துரந்துய்ந்து போந்திருந்தே.

**பொருள்** - தாராளமான குணம் கொண்டவனே! உன்னை அடைபவர்களுக்குத் தடையாக உள்ள பாவங்களை மது என்ற அசுரனை அழித்தது போன்று அழிப்பவனே! காண்பவர் களைப்பு நீங்கும்படியாக எல்லையற்ற உனது அழகை எனக்கு அனுபவிக்கத்தந்தவனே! உன்னை அனுபவித்தால் மற்ற உலகவிஷயங்கள் அனைத்தையும் துச்சமாக இகழும்படி உள்ள தன்மையை எனக்கு அளித்தவனே (அல்லது உன்னை அனுபவித்தால் ஈடுபடும் தன்மையை எனக்கு அளித்தவனே)! எல்லையற்றதும், எண்ணிக்கை அற்றதும் ஆகிய உனது திருக்கல்யாண குணங்களை எண்ணியபடி, அவற்றில் மூழ்கி, அதனால் வந்த ப்ரீதி காரணமாக ஆடியும் பாடியும் மகிழ்ந்தும், அதனால் என்னிடம் உண்டான துன்பங்கள் அனைத்தும் நீங்கப்பெற்று, உயர்வடைந்து உன்னிடம் வந்தடைந்தேன். இனி உன்னை நான் எப்படி விடுவேன்?

**அவதாரிகை** - "நாம் மருவி நன்கேத்தி உள்ளி வணங்கி நாம் மகிழ்ந்தாட" என்று தம்முடைய நைச்யத்தை அநுஸந்தித்தவாறே, "இவர் நம்மைவிடில் செய்வதென்?" என்று, அவன் அதிசங்கைபண்ண, நிர்ஹேதுகமாக உன் வடிவழகை நீ என்னை

அநுபவிப்பிக்க அநுபவித்து, அத்தாலே சிதிலனான நான் உன்னை விட ஸம்பாவனையுண்டோ?" என்கிறார்.

**விளக்கம் -** கடந்த பாசுரத்தில் ஆழ்வார் - நாம் மருவி நன்கேத்தி உள்ளி வணங்கி நாம் மகிழ்ந்தாட – என்பதன் மூலம் "நாம் நாம்" என்று ஒரு தடவைக்கு இரு தடவை உரைத்தார்; தனது தாழ்வைக் காண்பித்து நின்றதால், "இவர் நம்மை விட்டால் என்ன செய்வது?", என்று ஸர்வேச்வரன் சந்தேகம் கொண்டான். ஆகவே ஆழ்வார் அவனிடம், "எந்த ஒரு காரணமும் இல்லாமல் உனது வடிவழகை நான் அனுபவிக்கும்படி நீ செய்தாய். அதனால் உருக்குலைந்து நிற்கும் நான், உன்னை விடுவதற்குக் காரணம் ஏதேனும் உள்ளதோ?", என்கிறார்.

**வ்யாக்யானம் -** (வள்ளலே) நிர்ஹேதுகமாக உன்னை எனக்குத் தந்த பரமோதாரனே! (மதுசூதனா) நீ உன்னைத் தருமிடத்தில் நாம் ஸ்வீகரியாதபடி பண்ணும் விரோதிகளை, மதுவாகிற அஸுரனை நிரஸித்தாப்போலே நிரஸித்தவனே! (என் மரதகமலையே) உன்னை நீயாக்கும்படி உன்னிலும் சீரியதாய், ச்ரமஹரமாய், அபரிச்சேத்யமான வடிவழகையன்றோ எனக்கு ஔதார்யம் பண்ணிற்று. (உனை நினைந்து எள்கல் தந்த எந்தாய்) உன்னை அநுஸந்தித்தால், இதர விஷயங்களை நான் விடும்படி பண்ணினவனே என்னுதல்; அன்றிக்கே, எள்கலாவது - ஈடுபாடாய், உன்னை அநுஸந்தித்தால் "காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்" என்கிறபடியே அள்ளியெடுக்க வேண்டும்படி பண்ணித் தந்த என் நாயனே! என்னுதல். (உன்னை எங்ஙனம் விடுகேன்) "உதாரனல்லை" என்று விடவோ? "விரோதி நிரஸநனல்லை" என்று விடவோ? "உனக்கு வடிவழகில்லை" என்று விடவோ? உன் விஷயத்திலே இப்படி ஈடுபட்ட நான் உன்னை விட ஸம்பாவனை உண்டோ?" என்னுதல்; உன்னை அநுஸந்தித்தால், இதர விஷயங்களில் விரக்தனான நான் விட ஸம்பாவனை உண்டோ? என்னுதல்.

**விளக்கம் –** (வள்ளலே) - ஏதோ ஒரு காரணத்தால் ஏதேனும் ஒன்றை அளித்தால் அது வள்ளல்தன்மை ஆகாது. ஆகவே, எந்தவிதமான காரணமும் இன்றி உன்னை எனக்கு அளித்த மிகவும் உயர்ந்த வள்ளலே என்றார். (மதுசூதனா) - உன்னை நீ எனக்கு அளித்தாலும் என்னால் பெற்றுக் கொள்ள இயலாதபடிச் செய்யவல்ல

எனது பாவங்கள் என்னும் விரோதிகளை, மது என்ற அஸுரனை அழித்தது போன்று விலக்கியவனே! (என் மரதகமலையே) - “இவனே ஸர்வேச்வரன்” என்று உணர்த்தும்விதமாக உன்னைக் காட்டிலும் சீரியதாகவும், காண்பவருடைய களைப்பை நீக்குவதாகவும், அளவிட இயலாததாகவும் உள்ள உனது திருமேனி அழகை அல்லவோ எனக்குத் தாராளமாக அளித்தாய். (உனை நினைந்து எள்கல் தந்த எந்தாய்) - எள்கல் என்றால் த்யாகம் மற்றும் ஈடுபாடு என்று இரண்டு பொருள் உண்டு. அதாவது உன்னை எண்ணியபடி உள்ளபோது மற்ற உலக விஷயங்கள் அனைத்தையும் நான் கைவிடும்படிச் செய்தவனே! அல்லது எள்கல் என்றால் ஈடுபாடு என்று கொள்ளலாம்; அதாவது உன்னை நான் எண்ணியபடி உள்ளதால் பெரியதிருவந்தாதி (34) - காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும் - திருப்பாற்கடலில் நீ கண்வளர்ந்தருளும் அழகையும், உனது சீலம் ஸௌலப்யம் போன்ற குணங்களையும் கண்டு அனுபவிக்கவேண்டும் என்று அவசியம் இல்லை; அவற்றை இவ்விதம் உள்ளது குறித்து கேட்ட உடனேயே அங்கு செல்ல தகுதி அற்ற எனது கால்கள் தடுமாறின, நினைக்கும் நெஞ்சம் தவித்தது, கண்கள் தங்களுடைய காட்சிகளைக் காண இயலாமல் நின்றன - என்பதற்கு ஏற்ப, வாரி எடுக்கவேண்டும்படியாகச் செய்த என் நாயகனே! (உன்னை எங்ஙனம் விடுகேன்) – எங்ஙனம் என்றால் எந்தவிதத்தில் என்று பொருள். “தாராள மனம் கொண்டவன் அல்லன்” என்று கூறி விட இயலுமா? “எனது விரோதிகளை நீ அழிக்காமல் உள்ளாய்”, என்று கூறி விட இயலுமோ? “உனக்கு அழகான திருமேனி இல்லை” என்று கூறி விட இயலுமோ?” உனது விஷயத்தில் இந்த அளவு ஈடுபாடு கொண்ட நான், உன்னை விடுவதற்கு ஏதேனும் காரணம் உண்டோ என்கிறார். உன்னை எண்ணியபடி உள்ள காரணத்தால் மற்ற உலகவிஷயங்கள் குறித்து வெறுப்பு கொண்ட நான், உன்னை விடுவதற்கு வேறு காரணம் இருக்கமுடியுமா என்கிறார்.

**வ்யாக்யானம்** – இனி, மேலெல்லாம் அவன் அதிசங்கையைத் தீர்க்கிறார். (வெள்ளமே இத்யாதி) கடலோடு ஒத்திருந்துள்ள உன்னுடைய கல்யாணகுணங்களை நாலு மூலையும் புக்கு வ்யாபித்து, நான் மறுநனைந்து ப்ரீதிப்ரேரிதனாய்க் கொண்டு பாடி, அத்தாலே செருக்கி, மிகவும் ப்ரீதனாய். (உள்ள நோய்களெல்லாம் துரந்து) கர்மநிபந்தநமாக வருமவை, உன்னை பிரிந்து படுமவை, “அயோக்யன்” என்று அகன்று வருமவை, இத்யாதிகள்

எல்லாவற்றையும் ஓட்டி. (உய்ந்து) “ஸந்தமேநம் ததோ விது:” என்கிறபடியே உஜ்ஜீவித்து. (போந்து) ஸம்ஸாரிகளை விட்டு வ்யாவ்ருத்தனாய். (இருந்து) நிர்ப்பரனாயிருந்து – வள்ளலே! மதுசூதனா! - உன்னை எங்ஙனம் விடுகேன்?

**விளக்கம்** – அடுத்து, இனிவரும் வரிகளில் “ஆழ்வார் நம்மை விட்டு அகன்று விடுவாரோ?”, என்னும் அவன் சந்தேகத்தை விலக்குகிறார். (வெள்ளமே இத்யாதி) - எல்லை காண இயலாதபடி உள்ள கடல் போன்ற உனது திருக்கல்யாண குணங்களில் புகுந்து அனுபவித்து, அதில் பரிபூர்ணமான அனுபவத்தைச் செய்து உண்டான ப்ரீதி காரணமாக தூண்டப்பட்டவனாகப் பாடி, அதனால் கர்வம் அடைந்து, அதிக ப்ரீதி கொண்டவனாக. (உள்ள நோய்களெல்லாம் துரந்து) - துரந்து என்று தூரமாகச் செல்லும்படி அகற்றி. எனது கர்மம் காரணமாக வருபவையும், உன்னை என்னிடமிருந்து பிரிப்பவையும், “நாம் தாழ்ந்தவன்” என்று உன்னிடமிருந்து என்னை அகற்றி விடுபவையும் ஆகிய அனைத்தையும் நீக்கி. (உய்ந்து) - உபநிஷத்தில் – ஸந்தமேநம் ததோ விது: - ப்ரஹ்மம் உள்ளது என்று எண்ணுபவன் உள்ளவன் ஆகிறான் - என்பதற்கு ஏற்ப எண்ணியதால் பிழைத்து. (போந்து) – ஸம்ஸாரிகளைக் காட்டிலும் வேறுபட்டவனாக நின்றபடி. (இருந்து) - எனது பாரம் ஏதும் இல்லாதவனாக நின்று, “வள்ளலே! மதுஸூதனா!”, என்று அழைத்த நான் உன்னை நான் எவ்விதம் விடுவேன்?

2-6-5 உய்ந்து போந்தென் னுலப்பிலாத வெந்தீவினைகளை நாசஞ் செய்துன
தந்தமில் அடிமை அடைந்தேன் விடுவேனோ
ஐந்து பைந்தலை யாடரவணை மேவிப்பாற்கடல் யோகநித்திரை
நிந்தை செய்த வெந்தாய் உன்னைச் சிந்தை செய்து செய்தே

**பொருள்** – திருப்பாற்கடலில் ஐந்துவகையாக பிரிந்த தலைகள் கொண்டவனாக அசைந்தபடி வரும் ஆதிசேஷன் என்னும் படுக்கை மேலே கண்வளர்ந்து, இந்த உலகைக் காப்பது குறித்து சிந்திப்பதால் உறங்குவது போன்று காணப்படும் என் ஸ்வாமியே! இவ்விதம் அனைத்தையும் காப்பாற்றுவது குறிந்த சிந்தனையை வெளிப்படுத்தியபடி உள்ள உன்னை எப்போதும் நினைத்து நினைத்து நிற்பதால் எனது ஆத்மஸ்வரூபம் விளங்கப்பெற்று, இந்த உலகமக்களிடமிருந்து வேறுபட்டு,

நானே எனக்கு இதுவரை தேடியபடி இருந்த எல்லையற்ற க்ரூரமான அக்னி போன்ற பாவங்களை அழித்துக் கொண்டு, உனது நித்யமான கைங்கர்யத்தில் ஈடுபட்டு நிற்கிறேன். இனி உன்னை நான் விடுவேனோ?

**அவதாரிகை** – ஆத்மாந்த தாஸ்யத்திலே அதிகரித்த நான் உன்னை விட ப்ரஸங்கமுண்டோ என்கிறார்.

**விளக்கம்** - ஆத்மஸ்வரூபத்துக்கு ஏற்றதான புருஷார்த்தமாக உள்ள உனது கைங்கர்யத்தில் நிலைநின்ற நான் உன்னை விடுவதற்கு ஏதேனும் காரணம் உண்டா என்கிறார்.

**வ்யாக்யானம்** - (உய்ந்து போந்து) நான் உளேனாய், ஸம்ஸாரிகளில் வ்யாவ்ருத்தனாய்ப் போந்து. (என் உலப்பிலாத இத்யாதி) என்னுடைய, முடிவின்றிக்கேயிருந்துள்ள கொடிய பாபங்களை வாஸநையோடே போக்கி, உன் திருவடிகளிலே ஆத்மாந்த தாஸ்யத்திலே அதிகரித்த நான், இனி விட ப்ரஸங்கமுண்டோ? (விடுவேனோ) விஷயாந்தரங்களை விரும்பினேனோ விடுகைக்கு? ஸ்வரூப ஸித்தியின்றிக்கே யொழிந்து விடுகிறேனோ? தாஸ்ய பரிமளத்தில் சுவடறியாமல் விடுகிறேனோ? எனக்குத் தெகுட்டி விடுகிறேனோ? (ஐந்து இத்யாதி) அடிமையில் சுவடறிந்த திருவனந்தாழ்வான் உன்னை விடிலன்றோ நான் உன்னை விடுவது. பெருவெள்ளத்துக்குப் பல வாய்த்தலைகள் போலே பகவதநுபவத்தால் வந்த ஹர்ஷத்துக்குப் போக்குவீடாகப் பல தலைகளையுடையனாய், மதுபாநமத்தரைப்போலே ஆடா நிற்பானாய், சைத்ய ஸௌகுமார்ய ஸௌகந்த்யங்களை யுடையனான திருவனந்தாழ்வான்மேலே, திருப்பாற்கடலிலே, "ஸகல ப்ராணிகளும் கரைமரஞ் சேர்ந்ததாம் விரகென்?" என்று யோகநித்ரையிலே திருவுள்ளஞ் செய்த என் நாயனானவனே!

**விளக்கம்** – (உய்ந்து போந்து) - உன்னை நான் எப்போதும் எண்ணி எண்ணி எனது ஆத்மஸ்வரூபம் விளங்கப் பெற்ற நான் "உளன்" என்றவனாயும், ஸம்ஸாரிகளில் வேறுபட்டு நிற்பவனாயும். (என் உலப்பிலாத இத்யாதி) நானே எனக்குத் தேடிக் கொண்ட கணக்கற்றதான க்ரூரமான பாவங்களை அவற்றின் வாஸனையுடன்

நீக்கி, உனது திருவடிகளில் ஆத்மஸ்வரூபத்துக்கு ஏற்றதான கைங்கர்யத்தில் ஈடுபடும் நான், உன்னை விடுவதற்குக் காரணம் உண்டோ? (விடுவேனோ) – நான் மற்ற உலகவிஷயங்களை விரும்பியிருந்தால் அல்லவோ கைவிடுவதற்கு? எனது ஸ்வரூபம் ஸித்தி அடைந்த பின்னர் நான் விடுவேனோ? கைங்கர்யம் என்ற ரஸத்தின் சுவை அறிந்த பின்னர் விடுவேனோ? அந்தச் சுவை எனக்கு தெகட்டியது என்று காரணம் காண்பித்து விடுவேனோ? (ஐந்து இத்யாதி) - அடிமைத்தனத்தின் இன்பத்தை அறிந்த ஆதிசேஷன் உன்னை விட்டால் அல்லவோ நான் உன்னை விடுவேன்? மிகுதியான வெள்ளம் வடிவதற்குப் பல வாய்க்கால்கள் உதவுவது போன்று பகவத் அனுபவத்தால் உண்டான மகிழ்ச்சியை அனுபவிக்க உதவும் பல தலைகள் கொண்டவன்; கள் குடித்தவர்கள் போன்று ஆடியபடி உள்ளவன்; குளிர்ச்சி, மென்மை மற்றும் நறுமணம் கொண்டவன்; இப்படிப்பட்ட ஆதிசேஷன் மீது திருப்பாற்கடலில், “அனைத்து உயிர்களும் கரையேற என்ன வழி உண்டு?”, என்று யோகநித்திரையில் இருந்துபடி திருவுள்ளத்தில் சிந்திக்கும் எனது ஸ்வாமியே!

**வ்யாக்யானம்** - (யோகநித்ரை) “ஆத்மாநம் வாஸுதேவாக்யம் சிந்தயந்” என்கிறபடியே தன்னை அநுஸந்தித்தல். (எந்தாய்) நீர்மையைக் காட்டி என்னை அநந்யார்ஹ னாக்கினவனே! (உன்னைச் சிந்தை செய்து செய்து) நான் நினைக்கைக்கு க்ருஷி பண்ணின உன்னை நினைத்துவைத்து விட ப்ரஸங்கமுண்டோ?

**விளக்கம்** - (யோகநித்ரை) - ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-4-6) - ஆத்மாநம் வாஸுதேவாக்யம் சிந்தயந் – பரமபுருஷனாகிய வாஸுதேவன் என்றும் தன்னைச் சிந்தித்தபடி தன்னுடைய மாயாரூபமாக உள்ள ப்ரக்ருதியின் தொடர்பற்று யோகநித்ரையில் ஆழ்ந்தான் - என்பதற்கு ஏற்றபடி தன்னை எண்ணியபடி இருந்தான். (எந்தாய்) – ஸம்ஸாரிகள், “எங்களைக் காப்பாற்றவேண்டும்” என்று விண்ணப்பம் செய்யாதபோதிலும், “அவர்களை நாம் காக்கவேண்டும்” என்று எண்ணுவதைக் காட்டிலும் உயர்ந்த ஸௌலப்யம் இல்லை; அத்தகைய குணத்தைக் காண்பித்து உன்னை அல்லாமல் யாருக்கும் நான் அடிமை இல்லை என்று என்னை மாற்றியவனே! (உன்னைச் சிந்தை செய்து செய்து) - உன்னையே நான்

எப்போதும் எண்ணியபடி இருப்பதற்கான முயற்சிகள் செய்த உன்னை, எப்போதும் எண்ணுவது அல்லாமல் உன்னை நான் விடுவதற்குக் காரணம் உண்டோ?

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி திருவரங்கத்தமுதனார் அருளிச் செய்த

# இராமாநுச நூற்றந்தாதி

## இதற்கு ஸ்வாமி பிள்ளைலோகம் ஜீயர் அருளிச் செய்த வ்யாக்யானம் மூலமும், எளிய தமிழ்நடையும்

(பகுதி – 7)

2. கள்ளார் பொழில் தென் அரங்கன் கமலப் பதங்கள் நெஞ்சில்
கொள்ளா மனிசரை நீங்கிக் குறையல் பிரான் அடிக்கீழ்
விள்ளாத அன்பன் இராமானுசன் மிக்க சீலம் அல்லால்
உள்ளாது என் நெஞ்சு ஒன்றறியேன் எனக்கு உற்ற பேரியல்வே.

**பொருள்** – தேன் வழியும் சோலைகளால் சூழப்பட்ட அழகான திருவரங்கத்தில், அந்த உயர்ந்த திவ்யதேசம் மூலம் மட்டுமே தனது பெருமைகள் அனைத்தும் வெளிப்படும்படியாக அழகியமணவாளன் சயனித்துள்ளான். தாமரைமலர் போன்ற அழகும் செம்மையும் கொண்ட அவனது திருவடிகளைத் தங்கள் மனதில் நிலை நிறுத்தாமல் உள்ளவர்களும் இந்த உலகில் உண்டு. கிடைத்தற்கரிய மனிதப் பிறவி கிட்டியும், அதற்கு ஏற்ற பாக்கியம் பெறாத இந்த மனிதர்களை (பெரியபெருமாளின் திருவடிகளைத் தங்கள் நெஞ்சத்தில் எண்ணாதவர்களை), நான் விலக்க வேண்டும். திருக்குறையலூர் என்னும் திவ்யதேசத்தில் அவதரித்த திருமங்கையாழ்வாரின் திருவடிகளின் கீழே, எப்போதும் அகலாதபடி பக்தியுடன் இருப்பவர் எம்பெருமானார் ஆவார். அவருடைய மிகவும் உயர்ந்த குணங்கள் தவிர வேறு எதனையும் என் மனம் சிந்திப்பதில்லை. மிகவும் தாழ்ந்தவனாகிய என் போன்றவனுக்கு இத்தகைய உயர்ந்த நிலை ஏற்பட்டதற்கு என்ன காரணம் என்று அறியமுடியவில்லை.

**அவதாரிகை** - கீழிற்பாட்டில், “நெஞ்சே சொல்லுவோமவன் நாமங்களே” என்று தம்முடைய மநஸ்ஸோடே கூடி உபதேசித்தவாறே மநஸ்ஸானது அவருடைய சீலகுணத்திலே ஆழங்கால்பட்டு, “அநந்யாஸ்சிந்தயந் தோமாம்” என்கிறபடியே அவர் திருவடிகளை அநுபவித்துக்கொண்டு தத்வ்யதிரிக்தமானவறை விரும்பாதே யிருந்தது, இதென்ன ஆச்சர்யமென்கிறார்.

**விளக்கம்** - கடந்த பாசுரத்தில், “நெஞ்சே சொல்லுவோமவன் நாமங்களே” என்று தனது மனதிடம் உபதேசித்தவுடன், அந்த மனம் இராமாநுசரின் சீல குணத்தில் ஈடுபட்டு நின்றது; கீதையில் (9-22) – அநந்யாஸ்சிந்தயந் தோமாம் - வேறு எதனிலும் நாட்டம் இல்லாமல் – என்று கூறுவதற்கு ஏற்ப அவருடைய திருவடிகளை அனுபவித்தபடி, அதனைத் தவிர உள்ள மற்ற எதனையும் விரும்பாமல் இருந்தது; இது என்ன வியப்பு என்கிறார்.

**வ்யாக்யானம்** - (கள்ளார்பொழில்) “மதுவிருந்தொழுகின மாமலரெல்லாம் – கொழுங்கொடி முல்லையின் கொழுமலரணவிக் கூர்ந்தது, குணதிசை மாருதமிதுவோ, எழுந்தன மலரணைப் பள்ளிகொண்டன்னமீர்பனி நனைந்த தமிருஞ் சிறகுதறி - பைம்பொழில் கமுகின் மடலிடைக் கீறி வண்பாளைகள் நாற வைகறை கூர்ந்தது மாருதமிதுவோ” என்றும், “வான்றிகழுஞ்சோலை மதிளரங்கர்” என்றும், “பூகீ கண்டத்வயஸ ஸரஸ ஸ்நிக்த நீரோபகண்டாம் ஆவிர்மோத ஸ்திமித ஸகுநாநூதித ப்ரஹ்மகோஷாம்” என்றும் சொல்லுகிறபடியே மதுஸ்யந்தியான புஷ்பவிசேஷங்களாலே வ்யாப்த்தங்களான உத்யாநங்களாலே சூழப்பட்ட.

**விளக்கம்** - (கள்ளார்பொழில்) - திருப்பள்ளியெழுச்சி (1) - மதுவிருந்தொழுகின மாமலரெல்லாம் – கொழுங்கொடி முல்லையின் கொழுமலணவிக் கூர்ந்தது, குணதிசை மாருதமிதுவோ, எழுந்தன மலரணைப் பள்ளிகொண்டன்னம் ஈர்பனி நனைந்த தம் இருஞ் சிறகு உதறி பைம்பொழில் கமுகின் மடலிடைக் கீறி வண்பாளைகள் நாற வைகறை கூர்ந்தது மாருதமிதுவோ- என்றும், ஸ்வாமி பராசரபட்டர் தான் அருளிச்செய்த தனியனில் – வான்றிகழுஞ்சோலை மதிளரங்கர் - என்றும், ஸ்ரீரங்கநாத ஸ்தோத்ரத்தில் (5) – பூகீ கண்டத்வயஸ ஸரஸ ஸ்நிக்த நீரோபகண்டாம் ஆவிர்மோத ஸ்திமித ஸகுநாநூதித ப்ரஹ்மகோஷாம் -

திருவரங்கம் நீர் நிறைந்த காவேரியுடன் கூடியதாகவும், மனதைக் கவரும்விதம் மரங்கள் நிறைந்தும் உள்ளது. அங்குள்ள பறவைகள் அனைத்தும் வேதகோஷத்தை ஒத்த சப்தத்தை எழுப்பியபடி உள்ளன - என்றும் கூறுவதற்கு ஏற்ப மது நிறைந்த மலர்களால் வியாபிக்கப்பட்டதான நந்தவனங்களால் சூழப்பட்ட.

**வ்யாக்யானம்** - (தென்னரங்கன்) அத்தாலே தர்சநீயமான திருவரங்கமே தனக்கு நிரூபகமாம்படி நித்யவாஸம் பண்ணுகிற ஸ்வாமியுடைய திருப்பதியென்றபடி. இவ்விடத்துக்கு இது முக்யமான திருநாமங்காணும். (கமலப்பதங்கள்) கமலப்பதம் தீர்த்தவாசகமாய் – பாவநமான வென்னுதல்; ஸம்ஸாரதாப தப்தனுடைய ச்ரமஹரமான வென்னுதல். பாதக்கமலம் என்னாதே முந்துற முன்னம் "கமலம்" என்றது - ஸர்வேச்வரன் திருவடிகளை ஸேவிக்கும்போது பாவநத்வாதிகளுக்கு முன்னே போக்யதையைக் கண்டு முற்றூட்டாக வநுபவித்தவராகையாலே. (நெஞ்சில் கொள்ளா மனிசரை) "விசித்ரா தேஹ ஸம்பத்தி ரீச்வராய நிவேதிதும் பூர்வமேவ க்ர்தாப்ரஹ்மந் ஹஸ்தபாதாதி ஸம்யுதா" என்கிறபடியே அலப்யலாபமாக பகவச்சரண கமலபரிசரணத்துக்கு இட்டுப்பிறந்த மநுஷ்ய தேஹத்தைப் பெற்றும் திருவடிகளை நெஞ்சிலே கொள்ளாதே யிருக்கிற கர்ப்ப நிர்ப்பாக்யர் கோஷ்டியில் நின்றும், (நீங்கி) அகன்று. "காதா தாதாகதாநாம் களதி கமநிகா காபிலீ க்வாபி லீநா க்ஷீணா காணாத வாணீ த்ருஹிண ஹர கிர: ஸௌரபம் நாரபந்தே க்ஷாமா கௌமாரில உக்தி: ஜகதி குருமதம் கௌரவாத் தூரவாந்தம் கா சங்கா சங்கர ஆதே: பஜதி யதி பதௌ பத்ர வேதீம் த்ரிவேதீம்" என்று ஸர்வரும் ச்லாகிக்கும்படி பாஹ்யகுத்ர்ஷ்டிகளை பராஜிதமாகப் பண்ணுவித்து.

**விளக்கம்** – (தென்னரங்கன்) - அதன் காரணமாகக் காண்பவர்களுடைய களைப்பை நீக்குவதான திருவரங்கம் என்பதே தன்னை அடையாளம் காட்டும்படி எப்போதும் கண்வளர்கின்ற ஸ்ரீரங்கநாதனுடைய திவ்யதேசம். இங்கு இது முக்கியமான திருநாமம். (கமலப்பதங்கள்) கமலப்பதம் என்பது நீரைக் குறிப்பதாக உள்ளது; அதாவது தூய்மையான என்று கருத்து. ஸம்ஸார துன்பத்தில் சிக்கித் தவிப்பவர்களுடைய சிரமங்களைத் தீர்க்கும் இடம் என்று கருத்து. "பாதக்கமலம்" என்று கூறாமல் "கமலம்" என்ற பதத்தை ஏன் முதலில் கூறினார்? ஸர்வேச்வரனுடைய திருவடிகளை வணங்கி நிற்கும்போது அதனுடைய

தூய்மையான தன்மை முதலானவற்றை அனுபவிப்பதற்கு முன்பாக அதன் இனிமையை அனுபவிப்பததால் இவ்விதம் உரைக்கிறார். (நெஞ்சில் கொள்ளா மனிசரை) – ஸ்ரீவிஷ்ணுதத்வம் – விசித்ரா தேஹ ஸம்பத்தி ரீச்வராய நிவேதிதும் பூர்வமேவ க்ர்தாப்ரஹ்மந் ஹஸ்தபாதாதி ஸம்யுதா - கைகால் போன்ற அவயவங்களுடன் கூடிய விசித்ரமான இந்தச் சரீரம் ஸர்வேச்வரனை ஆராதித்தபடி இருப்பதற்காகவே முன்பு படைக்கப்பட்டு தொடர்ந்து இருந்து வருகிறது - என்பதற்கு ஏற்ப, கிட்டுவதற்கு மிகவும் எளியதாக உள்ள ஸர்வேச்வரனுடைய திருவடிகளுக்குக் கைங்கர்யம் செய்வதற்காகவே கிட்டப்பெற்ற மனித உடலை அடைந்த பின்னரும், அந்தத் திருவடிகளை மனதில் நிலைநிறுத்தாமல் உள்ளவர்களான கர்ப்பத்திலேயே பாக்கியம் இழந்தவர்களுடைய கூட்டத்தில் இருந்து விலகி. (நீங்கி) – அகன்று சென்று. யதிராஜ ஸப்ததி (70) - காதா தாதாகதாநாம் களதி கமநிகா காபிலீ க்வாபி லீநா க்ஷீணா காணாத வாணீ த்ருஹிண ஹர கிர: ஸௌரபம் நாரபந்தே க்ஷாமா கௌமாரில உக்தி: ஜகதி குருமதம் கௌரவாத் தூரவாந்தம் கா சங்கா சங்கர ஆதே: பஜதி யதி பதௌ பத்ர வேதீம் த்ரிவேதீம் - மூன்று வேதங்கள் மூலம் அமைக்கப்பட்ட ஸிம்ஹாஸனத்தை அடைந்து அதில் யதிராஜர் எழுந்தருளினார். உடனே நிகழ்ந்தது என்ன? பௌத்தர்களின் வாதம் உடனே நழுவியது. கபிலர் உபதேசித்த மார்க்கம் எங்கோ சென்று பதுங்கியது. காணாதரின் உபதேசம் மறைந்தது. நான்முகன், சிவன் ஆகியோரின் மதங்கள் நறுமணம் இழந்தன. குமாரிலபட்டரின் வாதம் தோற்றது. பிரபாகரரின் மதம் கற்பனை அதிகமாக உள்ளதென்று விலக்கப்பட்டது. சங்கரர் போன்றோர் வாதமும் கண்டிக்கப்பட்டதைக் கூற வேண்டுமா? – என்று கூறுவதற்கு ஏற்ப, வேதங்களுக்கு முரணாக பொருள் உரைக்கின்றவர்களை அனைவரும் போற்றும்படியாக வென்று.

**வ்யாக்யானம் -** (குறையல்பிரான்) திருக்குறையலூரிலே யவதரித்து, திவ்ய ப்ரபந்த நிர்மாணத்தாலும் திருவத்யயநத்துக்கு ஏகாதசியிலே திருநாள் நடப்பித்தபடியாலும், அவ்விடத்தில் பெருமாளுக்கரணாகத் திருமதிளை நிர்மாணம் பண்ணி வைத்தபடியாலும், ருத்ர பக்ஷபாதிகளான குத்ர்ஷ்டிகளோடே தர்க்கித்து அவர்களை ஜயித்து அவர்களாலே பழிக்கப்பட்ட திவ்யதேசங்களை நிர்வஹித்தபடியாலும், இப்படிகளாலே உபகாரகரான திருமங்கையாழ்வாருடைய. இவ்விடத்திலே இன்னமொரு யோஜனையுண்டு - (குறையல்பிரான்) “குறைவொன்றுமில்லாத கோவிந்தா” என்கிறபடியே ஹேய ப்ரத்யநீகனான கோவிந்தன். கோவர்த்தநோத்தரணம் பண்ணினபோது இந்த்ரன்

கோவிந்தாபிஷேகம் பண்ணினவாறே கோகோபீஜநங்களை ரக்ஷித்த உபகாரகன். அந்த அவதாரத்திலே, பூதநா சகர யமளார்ஜுநாரிஷ்ட ப்ரலம்ப தேநுக காளிய கேசீ குவலயாபீட சாணூர கௌஸல கம்ஸாதிகளை நிரஸித்து ஸ்வாச்ரிதர்களான பாண்டவர்களுக்கு தௌத்ய ஸாரத்யங்களைப் பண்ணி, "ந த்வேவாஹம்" என்று தொடங்கி, "மா சுச:" என்னுமளவும் தத்வோபதேசம்பண்ணியும், இப்படி நிகிலமநுஜமநோநயநஹாரி திவ்ய சேஷ்டிதங்களைப் பண்ணின உபாகாரகன். இதில் சரமச்லோகத்தை உபதேசிக்கை உபகாரத்திலே ப்ரதாநம். இப்படி ஒரு அர்த்த விசேஷம் தோன்றினாலும், நம்மாசார்யர்கள் திருமங்கைமன்னன் விஷயமாக அருளிச்செய்கையாலே பேசிற்றே பேசுகையே அவர்களுக் கேற்றமென்று முதல் சொன்ன பொருளே ஸங்கதமாகக்கடவது. (அடிக்கீழ்) திருமங்கையாழ்வாருடைய திருவடிகளின் கீழே.

**விளக்கம்** – (குறையல்பிரான்) - திருக்குறையலூரில் அவதரித்து, ஆறுவிதமான திவ்ய ப்ரபந்தங்களை நிலைநாட்டியதாலும், ஸ்ரீவைகுண்ட ஏகாதசித் திருநாளை ஸ்ரீரங்கத்தில் நடத்தி வைத்ததாலும், இங்குள்ள திருவரங்கனுக்கு அரணாக மதிள்களைக் கட்டியதாலும், ருத்ரன் போன்ற பல மதங்களைச் சார்ந்தவர்களுடன் வாதம் செய்து அவர்களை வென்று அவர்கள் தரக்குறைவாகப் பேசிய திவ்யதேசங்களை நிர்வஹித்ததாலும் என்று இப்படிப் பல உபகாரங்கள் செய்த திருமங்கையாழ்வாருடைய. இங்கு வேறு ஒரு பொருளும் உரைக்கலாம். (குறையல்பிரான்) - திருப்பாவை (28) - குறை ஒன்றும் இல்லாத கோவிந்தா – என்று கூறுவதற்கு ஏற்ப தாழ்வுகளுக்கு எதிர்தட்டாக உள்ள கோவிந்தன். கோவர்த்தன பர்வதத்தை எடுத்து நின்றபோது இந்திரனால் கோவிந்தன் என்று கொண்டாடப்பட்டு பசுக்களையும் ஆயர்களையும் காப்பாற்றி உதவியவன். அந்த க்ருஷ்ணாவதாரத்தில் பூதனை, சகடாஸுரன், யமளார்ஜுனர்கள், அரிஷ்டன், ப்ரலம்பன், தேனுகன், காளியன், கேசி, குவலாபீடம், சாணூரன், கௌஸலன், கம்சன் போன்ற பலரையும் வதைத்தான்; தன்னை அண்டி நின்ற பாண்டவர்களுக்காகத் தூது செல்லுதல், தேர் ஓட்டுதல் போன்றவற்றைச் செய்தான். கீதையில் (2-12) – ந த்வேவாஹம் – என்று தொடங்கி, (18-66) – மாசுச: - என்பது முடிய உள்ள உபதேசங்கள் செய்தான்; இப்படியாக அனைத்து உலகங்களும் எப்போதும் சிந்தித்தபடி அவர்களுடைய மனம் கவரும் விதம்

திவ்யமான லீலைகள் செய்து உதவியவன். இந்த ஒரு பொருளும் உரைக்கலாம் என்றுள்ளபோதிலும், நம்முடைய பூர்வாசர்யார்கள் இந்தப் பதத்தை திருமங்கையாழ்வார் குறித்தே அருளிச் செய்த காரணத்தால், அவர்கள் உரைத்தபடி உரைப்பதே அவர்களுக்குப் பெருமை என்று கருதி முதலில் கூறப்பட்ட பொருளே உசிதமானது என்று கொள்க. (அடிக்கீழ்) – இப்படிபட்ட திருமங்கையாழ்வாருடைய திருவடிகளின் கீழ்.

**வ்யாக்யானம்** – (விள்ளாதவன்பன்) இவ்வாழ்வார் ப்ரதமபர்வ நிஷ்டராகையாலே, "அணிபொழில் திருவரங்கத்தம்மானை" ப்ரார்த்தித்துக் கொண்டிறே யிருப்பர்; இவ்வெம்பெருமானார் சரம பர்வத்திலே ஊற்றமுடையவராகையாலே அவ்வாழ்வாருடைய திருவடிகளின் கீழ் ஒருக்காலும் விடாதே ஸக்தமான பக்தியை யுடையராயிருப்பர். விள்ளுதல் – நீங்குதல், அன்பு – பக்தி. (இராமாநுசன்) பூர்வாவதாரத்திலே ராமாநுவர்த்தநம் பண்ணின வாஸனை இப்போதும் அநுவர்த்திகையாலே அதுக்கு சரமபர்வமானவிதிலே ஈடுபட்டார்காணும். (மிக்க சீலமல்லால்) தாம் மஹாநுபாவராயிருந்து வைத்தும் என்போலாம் மந்தமதிகளோடே புரையறக் கலந்து பரிமாறின சீலகுணம் ஒன்றிலுமே ஈடுபட்டு. அதொழிய வேறொன்றிலும் போகமாட்டாது. உள்ளுதல் – சிந்தித்தல். (என்னெஞ்சு) என் மநஸ்ஸு. என்னாலே உபதேசிக்கப்பட்ட நெஞ்சு என்னும்படியாய்த்து.

**விளக்கம்** - (விள்ளாதவன்பன்) - இந்தத் திருமங்கையாழ்வார் பக்தி மற்றும் ப்ரபத்தியின் தொடக்கநிலையில் எப்போதும் உள்ளதால் பெரியதிருமொழி (5-8-1) – அணிபொழில் திருவரங்கத்தம்மான் - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரனை மட்டுமே எப்போதும் தொழுதபடி இருப்பார். ஆனால் எம்பெருமானார் இறுதி நிலையில் உள்ளதால், ஸர்வேச்வரனுடைய அடியார்கள் விஷயத்தில் நிலை நின்று, ஆழ்வாருடைய திருவடிகளை எப்போதும் விடாமல், உறுதியான பக்தி கொண்டவராக இருப்பார். விள்ளுதல் என்றால் விலகுதல், அன்பு என்றால் பக்தி. (இராமாநுசன்) – முன்பு லக்ஷ்மணனாக அவதரித்தபோது எப்போதும் இராமனை மட்டுமே கொண்டாடியபடி இருந்தார்; அந்த வாஸனை இப்போதும் தொடர்வதால் அந்த பக்தியின் இறுதி நிலையான அடியார்களைக் கொண்டாடுவதால் ஆழ்வாரை

அண்டி நின்றார். (மிக்க சீலமல்லால்) - எம்பெருமானார் அனைத்தும் அறிந்தவராக பலவிதத்திலும் உயர்ந்தவராக உள்ளபோதிலும் என்னைப் போன்ற தாழ்ந்த புத்தி கொண்டவர்களுடன் நீருடன் நீர் பிரிக்க முடியாதது போன்று கலந்து நின்று காண்பித்த சீல குணம் என்பதில் மட்டுமே ஈடுபட்டு, அதனை அல்லாமல் வேறு எதிலும் நாட்டம் இல்லாதபடி நின்று. உள்ளுதல் என்றால் சிந்தித்தல். (என்னெஞ்சு) – எனது மனம். என்னால் உபதேசம் செய்யப்பட்ட எனது மனம்.

**வ்யாக்யானம்** - (ஒன்றறியேனெனக்குற்ற பேரியல்லவே) என்னவாச்சர்யம், இப்படி ப்ரவணமாகைக்கு விரகொன்று மறிகிலேன். (எனக்கு) "ஜன்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோத்யாந ஸமாதிபிர் நராணாம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ண பக்தி ப்ரஜாயதே " என்றாப்போலே பஹுஜந்மங்கள் தன்னில் தபோஜ்ஞாந ஸமாதிகளைப் பண்ணவேண்டியிருக்க, அங்ஙனன்றியே, (சொல்லுவோ மவன் நாமங்களே) என்று அத்யவஸாய மாத்ரம் பண்ணினபடி எனக்கு, உற்ற - ஸித்தித்த (பேரியல்வே) "நார்வாந்தி ஸாரநஸ்தஸ்ய கவாம்கோடி தமீமபி" ஸமஸ்தோபாயங்களைக் காட்டிலும் பெரியதாய் விலக்ஷணமான உபாய விசேஷம்.

**விளக்கம்** - (ஒன்றறியேனெனக்குற்ற பேரியல்லவே) - என்ன ஒரு வியப்பு. இவ்விதம் அவரிடம் வசப்பட்டு நிற்பதற்கான காரணம் ஏதும் நான் அறியமாட்டேன். (எனக்கு) – ஜன்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோத்யாந ஸமாதிபிர் நராணாம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ண பக்தி ப்ரஜாயதே - ஆயிரக்கணக்கான வருடங்களில் செய்த தவம், த்யானம் போன்ற காரணத்தால் மட்டுமே ஒருவனுக்கு க்ருஷ்ணனிடம் ஈடுபாடு ஏற்படும் – என்பதற்கு ஏற்ப, பல பிறவிகள் தவம், த்யானம் போன்றவற்றைச் செய்தால் மட்டுமே பக்தி ஏற்படும் என்றுள்ளபோது, எனக்கு அவ்விதம் அல்லாமல், (சொல்லுவோ மவன் நாமங்களே) - அவருடைய திருநாமங்கள் மட்டுமே எப்போதும் உரைக்கும்படியாக எனக்குக் கிட்டிய. (பேரியல்வே) – நார்வாந்தி ஸாரநஸ்தஸ்ய கவாம்கோடி தமீமபி - ப்ரபத்தி செய்தவனுடைய மேன்மையில் கோடியில் ஒரு பங்கு கூட மற்ற உபாயங்களைக் கைக்கொண்டவர்கள் பெறுவதற்குத் தகுதி அற்றவர்கள் – என்று கூறுவதற்கு ஏற்ப,

மற்ற அனைத்து உபாயங்களைக் காட்டிலும் மிகவும் பெரிய மேன்மையான உபாயம்.

ஸ்வாமி திருவரங்கத்தமுதனார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி பிள்ளைலோகம் ஜீயர் திருவடிகளே சரணம்

...தொடரும்